# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஏப்ரல் 2003 ஜீவியம் 8 மலர் 12**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம்* IV | 2 |
| *இம்மாதச் செய்தி* | 17 |
| *லைப் டிவைன்* | 18 |
| *அன்பரும் நண்பரும்* | 22 |
| *சாவித்ரி* | 34 |
| *தீபாவளி - திருவுருமாற்றம்* | 36 |
| *அன்பர் கடிதம்* | 46 |
| *அஜெண்டா* | 48 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 52 |
| *இலட்சியத் திருமணம்* | 62 |


☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**756) புறத்தே ஏற்படும் இத்திருவுருமாற்றத்தை மனம் அறிந்தால் பிரச்சினை வாய்ப்பாகும்.**

***வாய்ப்பான பிரச்சினை.***

அன்னையிடம் வந்தபின் பிரச்சினைகள் தீர்கின்றன. இதுவரை தீராதவையும் தீர்கின்றன, இவற்றிற்கெல்லாம் தீர்வில்லை என்பனவும் தீர்கின்றன என்று பல அளவில் அனைவரும் கண்டுள்ளனர். அன்னையிடம் வந்தும் எனக்குத் தீராத பிரச்சினைகளுண்டு என்பவரும் உண்டு!

வாய்ப்பு என்பதையும் பக்தர்கள் கண்டிருந்தாலும், பிரச்சினை தீரும் அளவோடு, வாய்ப்பு வந்து பலிப்பதை ஒப்பிட முடிவதில்லை. பிரச்சினைகள் 100இல் 97 தீருகின்றன என்பவருக்கும், வந்த வாய்ப்பு 100 ஆனால் பலித்தது 4, 5 எனவும், 10க்கு மேல் பலிப்பதைக் காண்பதில்லை எனவும் பொதுவாக நாம் அறிவோம்.

**பிரச்சினை தீருவதற்கும், வாய்ப்பு பலிப்பதற்கும் சட்டம் ஒன்றே என்றாலும் வாய்ப்பைப் பெற அதிக திறமை வேண்டும்.**

தாய்மொழியைக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்கும்பொழுது எளிதாக, அழகாகக் கற்றுக்கொள்கிறது. புதிய புத்தகத்தை 3 மாதத்தில் கற்கிறது. எல்லா மொழிகள் பயில்வதற்கும் சட்டம் ஒன்றே என்றாலும், பிறமொழியை குழந்தைக்குப் பயிற்றுவிக்கும் பொழுது அதே புத்தகத்தை 3 வருஷத்தில் கற்றுக்கொள்கிறது. அதுவும் அவ்வளவு திருப்தியாக இருப்பதில்லை.



தாய்மொழி மனத்திலும், வாயிலும், உள்ளேயும், புறத்திலும் எங்கும், எப்பொழுதும், நிறைந்துநின்று நிலவி வருவதுபோல் மனிதன் பிரச்சினைகளால் அளவுகடந்து சூழப்பட்டும், அதனால் (pressure) கசக்கப்பட்டும், விடுபட ஆர்வமாக இருப்பதால், அன்னையை அவன் அழைக்கும்பொழுது குரல் முழுமையாக ஆழத்திலிருந்து எழுந்து உடனே தீர்வளிக்கிறது.

வாய்ப்பு பிறமொழிபோல் கேட்பதறிது. புத்தகத்தில் மட்டும் இருக்கிறது, காதில் ஒலிப்பதில்லை. மனத்தில் நிலவுவதில்லை. இயற்கையான சூழலோ, ஆர்வமோ அளவு கடந்திருப்பதில்லை. எனவே தீவிரம் இருப்பதில்லை. வாய்ப்பு எவ்வளவு விரும்பத்தக்கதானாலும், அதை நாடுவதில் தீவிரம் இல்லை.

***மனம் அத்தீவிரத்தை அளிக்கவல்லது.***

சூழ்நிலை மாறுவதை மனம் அறிந்துகொண்டால் பிரச்சினை தீருவதுடன் அது வாய்ப்பாக மாறும். முதலில் செய்த வியாபாரம் திவாலானபின் ஏன் அது திவாலாயிற்று என்று மனம் சிலருக்கு புரிந்துகொள்ளும். அடுத்தாற்போல் அவர் செய்யும் தொழில் அபரிமிதமாகப் பெருகும். 50,000த்தில் செய்த 7 தொழில்கள் விரயமானவர் அதன் சூட்சுமத்தை அறிந்தார். 10 ஆண்டுகளில் அவர் பிள்ளைகள் 50 கோடியில் தொழில் செய்கிறார்கள்.

பிரச்சினை என்பது செய்யும் காரியத்தில் தேவையானவை குறைந்தாலோ, அதற்குரிய திறமை குறைந்தாலோ, எதிரான சந்தர்ப்பங்களிருந்தாலோ காரியம் பிரச்சினையாகிறது.

வாய்ப்பு வரும்பொழுது நம் நிலைமை சரியாக இல்லாததால், பிரச்சினையாகத் தோன்றும். ஆப்பரேஷனில் பொறுக்க முடியாத வலி எழுந்த நிகழ்ச்சியை எழுதினேன். "வரும் பெண் என் மீது

வெறுப்புள்ளவள். அவளிடம் நான் பிரியமாகப் பழகினால் அவள் வெறுப்பை நான் ஏற்பதாக அர்த்தம். என் பிரியம் அவள் வெறுப்பின்மீது பிரியமாக மாறும். அதன்பின் வெறுப்பு அதன் வேலையைச் செய்யும்" என்று அப்பெண்ணிற்குப் புரிந்து அவர்களை விலக்கினால், அது திருவுருமாற்றம். பெரியவர்கள் விலக்குவதை நான் விலக்க வேண்டும் என்பது நல்ல குணம். அப்படி விலக்கியிருந்தால் அதிகப்படியான வியாதியோ, வலியோ பட்டிருக்க வேண்டியிருக்காது. தனக்குள்ள கெட்ட குணம் தன்னைப் பார்க்க வருபவர்கள் கெட்ட குணமாகப் பிரதிபலிக்கிறது. அவர்களை விலக்குவது என் கெட்ட குணத்தை விலக்குவதாகும் என்பது மனமாற்றம். என் மறுத்துப் பேசும் குணத்தால், எனக்குக் கெட்ட குணமுள்ளவர் தேடி வருகிறார்கள். இந்த மறுத்துப் பேசும் குணத்தை ஏற்றுக் குணமாக மாற்றுகிறேன் என்பது புறத்தேயுள்ள திருவுருமாற்றம். அத்திருவுருமாற்றம் வழியாக அருள் செயல்படும். டாக்டர் வந்து ஆப்பரேஷனே தேவையில்லை என்பார் அல்லது சிறு உபாதையுடன் ஆப்பரேஷன் முடியும். கெட்ட குணமுள்ளவர் வருகிறார் என்ற பிரச்சினை ஆப்பரேஷன் தேவையில்லை என்ற வாய்ப்பாக மாறும்.

☆ ☆ ☆

**757) புற நிகழ்ச்சியால் உடலைத் தீண்டும் இவ்வனுபவம் கழுத்தை நெறிக்கும் கைகளை இறைவனின் ஸ்பர்சமாக அறியும்.**

***ஸ்பர்சத்தின் இனிமை.***

ஒன்றான இறைவன் பலவான ஜீவன்களானான், ஏகன் அநேகனானான் என்பது தத்துவம். மனிதப் பிறவியில் நாம் நம்மை மட்டும் அறிகிறோம். பிரம்மம் தன்னை மட்டும் அறியும். சத்தியஜீவியத்தில் மனிதன் தன்னை இறைவனாகவும், மற்றவர்களை



இறைவனாகவும் அறிவதுடன், தன்னுள் அத்தனை ஜீவாத்மாக்களிருப்பதையும், மற்ற அத்தனை ஜீவன்களிலும் தானிருப்பதையும் உணர்கிறான். இந்த நான்கு நிலைகளையும் ஒரே சமயத்தில் அறியவல்லது சத்தியஜீவியம்.

மனம் ஒன்றை மட்டும் அறியும். அத்தனை ஜீவாத்மாக்களும் தன்னுள் இருப்பதை அறிந்த மனிதன், அதை மட்டும் ஏற்க முன்வந்தால், மனத்தின் அறிவு செயல்படும் வகை வேறு. அனைவரும் தனக்காக வாழவேண்டும் என அவன் நினைக்கின்றான். அது சுயநலமாகிறது. தான் பிற ஜீவன்களிலிருப்பதை அறிந்தால் பரநலம் ஏற்படுகிறது.

இந்த நான்கு ஆன்மீக அனுபவங்களையும் பெற்றவன் பிறரைத் தானாக உணர்ந்து, தன்னை இறைவனாக அறிந்து, பிறரையும் இறைவனாக அறியமுடிகிறது. பிறர் கை தன்னைத் தீண்டினால், அது இறைவன் தன்னைத் தீண்டுவதாகும் எனவும் புரியும். கழுத்தை நெறிக்கும் பிறனுடைய கையைத் தன் கையாக அறியும்பொழுது, தானே தனக்கு ஊறு செய்யவில்லை என்று தெரிகிறது. அதன் சூட்சுமம் விளங்குகிறது. அதுவும் இறைவனின் கரம் எனத் தெரிகிறது. எனவே அது இறைவனின் ஸ்பர்சத்திற்குரிய கருணை வெள்ளத்தை எழுப்புகிறது.

உலகம் ஓர் அற்புதக் காட்சி என்பதும், புறநிகழ்ச்சி இறைவன் எனவும், தானே இறைவன் என்பதும் அறிந்தவுடன்; ஐக்கியம் என்ற உணர்வெழுந்து ஆன்மா மலர்ந்து உடல் சிலிர்த்து உள்ளம் பூரித்து மனம் மகிழ்வெய்துகிறது.

***இது சத்தியஜீவிய உணர்வு.***

அலிப்பூர் ஜெயிலில் ஸ்ரீ அரவிந்தர் பெற்ற காட்சி இது. அவருக்குக் கைதிகள் கிருஷ்ணனாகக் காட்சி அளித்தார்கள்.

அதனால் அவர்மீது நடத்தப்பட்ட கேஸ் இறைவனின் செயலாக இருந்தது. வக்கீலுக்குத் தம் கேஸ் பற்றிய விவரங்களை அவர் கூற முன்வந்தபொழுது உள்ளேயிருந்து குரல் 'பேசாதே' என்றது.

**கேஸ் இறைவனுடையது.**

**கேஸே இறைவன்.**

**விசாரணை இறைவனின் ஸ்பர்சம்.**

**தீர்ப்பு ஆண்டவனுடையது.**

என்னால் விடமுடியாத பந்தங்களை விடுவிப்பதற்காக என்னை சிறைப்படுத்தினாய் என்று இறைவனிடம் பகவான் கூறுகிறார்.

உன் கழுத்தை நெறிக்கும் கைகளையும் இறைவனின் ஸ்பர்சமாக அனுபவிக்கவேண்டும் என்பது பகவான் வாக்கு. அவர் எழுதியவற்றைத் தத்துவமாகவோ, வியாக்கியானமாகவோ, உரை எழுதியதாகவோ எடுத்துக்கொள்ளாமல், அவை இறைவன் அருளிய சொற்கள், வேதவாக்கு என ஒருவரால் எடுத்துக்கொள்ள முடியுமானால், அவருக்குப் பூரண யோகத்தின் ஞானம் பலித்ததாக அர்த்தம். ஸ்ரீ அரவிந்தம் என்றால்,

- **உலகில் ஆனந்தம் தவிர வேறில்லை.**
- **தீமை, வலி என்பவை உலகிலில்லை, அது அகந்தையின் பார்வை.**
- **பூரணயோக ஞான திருஷ்டிக்கு உலகம் ஓர் அற்புதக் காட்சி.**

சாதாரண மனிதன் தவம் செய்ய விருப்பப்பட்டால், "தவம், உனக்கில்லை" என்று பதில் வரும். அது முன்னாள் நிலைமை. முடியாட்சியைப் போன்றது. பணக்காரன் ஆட்சியில் ஏழைக்கு ஒன்றுமில்லை என்பதுடன் ஏழை தனக்குள்ள சௌகரியத்தின் மரியாதையை அனுபவிக்க பணக்காரன் விடமாட்டான். ஜாதித்திமிர், பணத்திமிர், ஏழைக்கு இருப்பதை அனுபவிக்க அனுமதிக்காது. மக்களாட்சியில் உரிமை எல்லோர்க்கும் உண்டு. எல்லா உரிமைகளும் எல்லோர்க்கும் உண்டு. திறமைக்குத் தகுந்த பலன் உண்டு. அன்னையின் யோகம், "யோகம், உனக்கில்லை" என்று கூறாது. யோகம் அனைவருக்கும் உண்டு. பலன் பயிற்சியைப் பொருத்தது என்பது அன்னை சட்டம். ஸ்பர்சத்தின் இனிமையை நாமெல்லாம் காணமுடியுமா என்று கேட்டால், அன்பர் அதற்குரிய தீவிரத்தை க்ஷண நேரம் பெறமுடியும். அந்த நேரம், அந்த அளவில், ஸ்பர்சத்தை அறியமுடியும். நிலத்தில் பக்தர் வேலை செய்யும்பொழுது அன்னை நினைவைப் பூர்த்திசெய்ய முயன்று வெற்றி பெற்றார். இனி, நினைவில்லாமல் குனிவதோ, நிமிருவதோ இல்லை என்ற நிலை ஏற்பட்டது. நீர் இறைக்கும் இன்ஜின் பெல்ட் அறுந்து வேகமாக ஓடும்பொழுது அவர் முதுகில் அறைந்தது. இது வலி தாங்காது, உயிர் போகும். அவருக்கு அந்த வலி தெரியவில்லை, சற்று இதமாகவுமிருந்தது. அவ்வளவு வேகமாக அடித்தும் காயம் படவில்லை, இரத்தம் கட்டவில்லை. இது எல்லா அன்பர்கட்கும் உரியது.

☆ ☆ ☆

### 758) ஒன்றை நாடினாலும், விழைந்தாலும் கழுத்தை நெறிக்கும் கைகளாக கடவுள் உன்னைத் தீண்டுகிறார்.

***விருப்பின் விளைவு.***

இறைவனின் போக்கே தம் போக்கு என இருக்கும் அன்பருக்கு இறைவனின் ஸ்பர்சம் கருணை வெள்ளமாக அமைகிறது. இது கஷ்டம் தீர்வதாக அமைந்தால், "கருணைக் கடலே" என துதி பாடுகிறோம்.

இறைவனின் பாதையிலிருந்து மாறியபின்னும் இறைவனின் ஸ்பர்சம் முன்போலவே அமைகிறது. என்றாலும் நம் பாதை மாறியதால் ஸ்பர்சம் கருணை வெள்ளமாக இருப்பதில்லை. நாம் விலகிப் போவது அதிகமானால், ஒரு கட்டத்தில் அவன் தீண்டுதல் தண்டனையாகவும், கழுத்தை நெறிப்பதாகவும் அமைகிறது. அவனோ, அவனது தீண்டுதலிலோ மாறுதல் இல்லை. நம் போக்கு மாறுகிறது. நீந்துவதில் சிறப்பானவன் கடலில் நீச்சலடிக்க ஆர்வம் கொண்டால், கடல் அவனைத் தன் மடியிலிருத்தி முத்தமிடுகிறது. நீந்தத் தெரியாவிட்டால் கடல் அவனுக்கு மரணத்தைத் தருகிறது. கடல் தன் நிலையிலிருந்து மாறவில்லை, நம் நிலை மாறுகிறது.

நாம் ஒன்றை நாடும்பொழுது இறைவன் அதை நமக்கு அளிக்கின்றான். அது கிடைக்காத நேரம் பிரார்த்தனை செய்தால் பலிக்கிறது. சில சமயம் பிரார்த்தனையும் பலிப்பதில்லை. மீண்டும் அதை நாடினால் தடை ஏற்படுகிறது. தொடர்ந்து நாடினால் தண்டனை கிடைக்கிறது. பின்னும் மனம் அதிலிருந்தால் இறைவனின் ஸ்பர்சம் கழுத்தை நெறிப்பது போலிருக்கிறது.

களேபரம் செய்த தொழிலாளிகள் தாங்களே தங்கள் வீட்டைக் கொளுத்திவிட்டு, முதலாளிமீதும், ஆபீசர்கள்மீதும் போலீஸில் புகார் கொடுத்தார்கள். போலீஸ் அவர்களைக் கைது செய்ய புறப்படும் சமயம் முதலாளியும், ஆபீசர்களும் அங்குத் தங்கள் புகாரைக் கொடுப்பதற்காக வந்தனர். போலீஸ் அவர்களைக் கைது செய்ய திட்டமிட்ட சமயத்தில் அவர்களே வந்தது போலீஸின் எண்ணம் நிறைவேறுவதாக இருந்தது. இந்த எண்ணம் தெரிந்திருந்தால் அவர்கள் அந்தப் பக்கம் வந்திருக்கமாட்டார்கள். ஏட்டு முதலாளிக்கு வேண்டியவர். “சார், சாப்பிடவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விடுங்கள்” என்று அவர் கூறியதை முதலாளி புரிந்துகொண்டார்,



ஆபீசர்களுக்குப் புரியவில்லை. அவர் தப்பித்துக்கொண்டார், மற்றவர்களைக் கைது செய்தனர். நாம் எதை விட்டு விலகவேண்டுமோ அதையே நாடிச் சென்றால், அது விலங்காக மாறுகிறது.

யோகத்தையும், அன்னையையும், பகவானையும் ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் வாழ்வை அன்னையிடம் ஒப்படைத்தவர்கள். அதனால் அவர்கள் நாடவேண்டியதோ, தேடிப் போகவேண்டியதோ ஒன்றும் இல்லை. சாதாரண மனிதன் நாடுவதைச் சாதகன் நாடுவது தவறு. அதனால் இறைவனின் தீண்டுதல் கழுத்தை நெறிப்பதுபோல் தென்படுகிறது. அதையும் கருணையின் கடாட்சமாக அறிந்தால், அதுவும் கருணை வெள்ளமாக மாறும். அது முடிவான பக்குவம் உள்ளவருடைய நிலை.

**இறைவன் என்றும் நம்மைத் தீண்டுகிறார்.**

**நம் நிலைக்கேற்ப அது நமக்குத் தெரிகிறது.**

பரமாத்மாவே ஜீவாத்மா என்பது ஸ்ரீ அரவிந்தம். ஜீவாத்மா அகந்தையால் சூழப்பட்டுள்ளது. அகந்தையின் வளர்ச்சிக்குள்ள பருவங்கள் பல. அவை:

1) **தன் கூட்டுக்குள் வளரும் அகந்தை. இதன் பாகங்கள் ஏராளம். 3 என்றோ, 6 என்றோ, இரண்டையும் இணைத்து 18 என்றோ கூறலாம். நாம் 3 நிலைகளை மட்டும் கருதுவோம்.**

- ❈ **காரியங்களைச் செய்யக் கற்றுக்கொண்டு அகந்தை வளர்வது.**
- ❈ **அடுத்தவர்களுடன் பழகக் கற்பதால் அகந்தை வளர்வது.**
- ❈ **விஷயங்கள் புரிவதால் மனத்தில் அகந்தை வளர்வது.**

2) தன் கூட்டைவிட்டு வெளியேயுள்ளவற்றின் உதவியால் அகந்தை வளரும்.

அகந்தையைக் கடப்பதால்,

- ✳ **வளரும் திறமை.**
- ✳ **எழும் பழக்கம்.**
- ✳ **விளங்கும் கருத்துகளை அகந்தை மீண்டும் தன் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முயல்வது.**

3) ஆத்ம விழிப்பு ஏற்படுவதால்,

- ✳ **காரியங்கள் கலை நுணுக்கத்துடன் அமைவது.**
- ✳ **கலைகளில் திறமை வெளிப்படுவது.**
- ✳ **தத்துவம், விஞ்ஞானத் தெளிவு வருவது ஆகியவற்றை மீண்டும் அகந்தை தன் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது.**

ஸ்ரீமத் பகவத்கீதையின் முக்கிய கட்டங்கள் :

- ✳ **பலனை நம்பாதே.**
- ✳ **எதை ஆர்வமாக நாடினாலும் அதை மனிதன் சாதிப்பான்.**
- ✳ **ஆசையை அழித்துவிடு.**
- ✳ **அகந்தையை களைந்துவிடு.**
- ✳ **சர்வதர்மங்களையும் மறந்து சரணடைந்து மோட்சத்தை நாடு.**

ஆத்ம விழிப்பு ஏற்படும்வரை அகந்தையின் வளர்ச்சிக்குப் பெரும் போராட்டமில்லை. அது உள்ள சூழ்நிலையில் அதிகாரத்திற்கு எளிமையாகக் கட்டுப்படும். அதனால் சிரமம் எழுவதில்லை. ஆத்ம விழிப்பு ஏற்பட்டபின் ஆண்டவன் அகந்தையான மனிதனை நாடுகிறான். மனிதன் நல்லுணர்வோடிருந்தால் ஆண்டவனுடைய ஸ்பர்சம் பரவசமாகவும், கெட்ட எண்ணத்துடனிருந்தால் கொடூரமாகவும், ஆசையோடு செயல்பட்டால் அவஸ்தையாகவும்,



அன்போடு நடந்தால் இனிமையாகவும் வருகிறது. அதனால் ஸ்ரீ அரவிந்தம் முடிவாகக் கூறுவது,

- ✳ மனிதன் அகந்தையை விடுமுன் ஆன்மவிழிப்புப் பெறுகிறான்.
- ✳ அகந்தையிருப்பதால் இறைவனின் ஸ்பர்சம் இடையூறாக இருக்கிறது.
- ✳ ஆர்வம் அதிகமானால் கடுமை அதிகமாகும்.
- ✳ எப்பொழுது கடுமை கொடுமையாகிறதோ அதுவே அகந்தைக்கு அதிர்ஷ்டமான நேரம்.

மேற்சொன்ன கருத்து இதன் ஓர் முக்கியப் பகுதி. அதை விருப்பத்தின் விளைவு என்கிறோம்.

✫ ✫ ✫

## 759) நாடுவதை நிறுத்தி பார்வையை உள்ளே செலுத்தினால் வாழ்வு அற்புத உணர்வாக அணைக்கும்.

***உள்நோக்கின் அற்புதம்.***

நம் பார்வை உள்ளே செல்வதில்லை. மனம் புறவிஷயங்களை நாடுவதால் பார்வை வெளிச் செல்கிறது. பார்வை மனத்தின் பகுதி. எனவே மனம் போன வழி பார்வை செல்கிறது. வெளிச் செல்லும் பார்வைக்கு சக்தி குறையும். உட்செல்லும் பார்வைக்கு சக்தி அதிகரிக்கும். வெளியே சென்றால் பிரச்சினை எழும், தெளிவு குறையும். உட்சென்றால் பிரச்சினைகள் தீரும், தெளிவு நிறையும். நிறைந்த தெளிவு செறிவு பெற்றால் உணர்வுமயமாகி, உட்ஜோதியைத் தொடும். ஜோதி உணர்வை அற்புதமாக்கும். உணர்வின் ஜோதிக்கு வாழ்வு கட்டுப்படும். கட்டுப்படாத வாழ்வு தொந்தரவு செய்யும். கட்டுப்பட்ட வாழ்வு ஆதரவு அளித்து, அணைக்கும்.

உடலின் வேதனை பரவி தாங்கமுடியாமல் துடிக்கும்பொழுது, அன்னைக்கு வேண்டிக்கொண்டால் வலி போகும் என்றொருவர் சொல்லியதை மனம் ஏற்றது. பிரார்த்தனை செய்ய நோயாளி சம்மதித்தார். அன்னை தம் கையால் உடலை வருடிவிடுவதாக நினைத்து பிரார்த்தனை செய்வது சிறப்பு என்றார் வந்தவர். அப்படியே செய்தார் நோயாளி. கொஞ்ச நேரத்தில் கண்மூடி அயர்ந்து தூங்கிவிட்டார். உணர்வு சிதறும்பொழுது வலி ஏற்படுகிறது. உணர்வு வெளிச்செல்லும்பொழுது வலி எனும் பிரச்சினையை உண்டுபண்ணுகிறது. உணர்வு உள்நோக்கிச் சென்றால், பிரச்சினை தீரும், வலி போகும் என்பது விளக்கம். அந்த விளக்கம் வலிபடும் நோயாளிக்குப் பலன் தரப்போவதில்லை. உணர்வு உள்நோக்கிச் செல்லவேண்டும் என்ற கருத்தை, அன்னைக்குப் பிரார்த்தனை செய் என்று மாற்றிச் சொன்னார். அன்னையை மனம் நினைத்தால் மனம் வலியிலிருந்து விலகும், வெளிச் செல்லாது. அன்னை உள்ளேயிருக்குமல்லவா? அன்னையை நினைக்க உணர்வு உட்செல்கிறது. உட்சென்ற உணர்வு அன்னையில் குவிகிறது. அன்னை உடலை வருடிவிடுவதாக நினைக்கும்பொழுது, வலி எனும் உணர்வு அன்னை உணர்வோடு தொடர்புகொண்டு, அன்னை மையத்தை நோக்கிச் சென்று குவிகின்றன. உணர்வின் செறிவு அன்னை ஜீவியத்தின் செறிவை எட்டும்பொழுது, அற்புத உணர்வேற்படுகிறது.

வாழ்வில் நம் உணர்வு வலியானபின் வலிமையற்றுள்ளது. வலிமையற்ற உணர்வு வெளிச்செல்லும்பொழுது, இருக்கும் வலிமையும் குறையும், வலி அதிகமாகும். வாழ்வின் உணர்வுக்கு வலிமை அதிகமாகவும், நம் உணர்வின் வலிமை குறைவாகவுமிருப்பதால் நாம் வலி படுகிறோம். பிரார்த்தனையாலும், அன்னை நினைவாலும், அன்னை உடலில் வலியுள்ள இடத்தை வருடிக் கொடுப்பதாக நினைப்பதாலும், வெளிச்செல்லும் உணர்வு உள்நோக்கிச் செல்கிறது.

***உள்நோக்கி செல்லும் உணர்வு பிரச்சினையை அழிக்கும்.***
***பிரச்சினை வலியானால், அது வலியைப் போக்கும்.***
***உணர்வு அன்னையில் சேர்ந்தால் வலிமை பெருகும்.***
***வலிமையுள்ள உணர்வுக்கு அற்புதம் உண்டு.***
***அதனால் அற்புத உணர்வு எழும்.***
***அற்புத உணர்வு தன் வலிமையால் வாழ்வைக் கட்டுப்படுத்தும்.***
***கட்டுப்பட்ட வாழ்வு அன்புக்குரிய ஆதரவைத் தரும்.***

வாழ்வு அடுக்கடுக்காக அமைந்துள்ளது. ஓர் அடுக்கில் உள்ள அற்புதம் கீழே சென்று பார்த்தால் வெறுங்காட்சியாகத் தெரிகிறது. மேலும் ஒருபடி கீழே போனால் வெறுங்காட்சியாக இருந்தது, கடுமையாகத் தெரியும். அற்புதத்திலிருந்து கீழே வருவதற்குப் பதிலாக ஒருபடி மேலே போய்ப் பார்த்தால் பெரிய அற்புதமாக இருக்கும். தொடர்ந்து மேலே போனால் காட்சி மறையும், உணர்வு மிஞ்சும். தொடர்ந்தால் உணர்வுமிருக்காது. இது சிருஷ்டிக்குரிய நிலைகள். தெய்வ வழிபாட்டில் இதுபோன்ற நிலைகளைக் காணலாம். விக்ரஹ வழிபாடு ஒரு நிலை. அதன்கீழ் கிராமதேவதை எனக் 'காளி' வழிபாடு பலியுடன் - ஆடு, கோழி பலி கொடுப்பது - நடக்கிறது. காட்டேரி வழிபாடு அதன் கீழுள்ளது. விக்ரஹ வழிபாட்டைக் கடந்து மேலே சென்றால் தத்துவம், பிரம்மம் எனக் கூறுகிறது. பிரம்மத்திலும் இருவகைகளுண்டு. அவற்றைக் கடந்த புருஷன், புருஷோத்தமன் உண்டு. முடிவாக துரியநிலை எனும் சச்சிதானந்தம். பிரம்மம் அதையும் கடந்தது.

***புறத்தை நோக்கிப் போவதும், அகத்துள் செல்வதும்***

*அடுத்த அடுத்த கட்டங்கள். புறத்தில் அர்த்தமற்றதாகத் தெரிபவை அகத்தில் அற்புதமாகத் தெரியும்.*

☆ ☆ ☆

**760) உள்ளே போவதைவிட உள்ளே அன்னையைத் தேடுதல் நன்று. ஆன்மா அன்னையை உள்ளே தேடுவது ஆனந்தம் Bliss. அறிவாலும், செயலாலும் அன்னையை அகத்தில் தேடுவது சிருஷ்டியின் ஆனந்தம் (delight).**

***சிருஷ்டியின் ஆனந்தம்.***

மேல்மனம் வாழ்க்கைக்குரியது. இது சிறியது, காலத்திற்குக் கட்டுப்பட்டது. அறியாமையாலானது, அகந்தைக்குரியது. உள்ளே போனால் காலத்தின் பிடி தளரும், அறியாமை குறையும், அகந்தை விலகும். உள்ளே போகாமல் எந்த யோகமும் செய்யமுடியாது. பூரணயோகத்திலும் உள்ளே போவது முதற்படி. போய் அங்கு சைத்தியப் புருஷனைக் காணவேண்டும். இது பெரிய உண்மை; பொது உண்மை. உலகத்தைச் சுற்றிவந்தால் மாம்பழம் தருகிறேன் என்றால், உலகத்தை சுற்றிவருவது முறை. அதைவிட்டு பெற்றோரைச் சுற்றிவருவது அதற்குச் சமம் என்பதும் உண்மை. அதுபோன்ற உண்மையை மேலே எழுதினேன்.

அன்னையை வாழ்வில் காண்பது சாதகனுக்கும், பக்தனுக்கும் உள்ள பொது விதி. ஏழையில் ஆண்டவனைக் காண்பது, நேரில் ஆண்டவனைக் காண்பதைவிடச் சிறப்பு. வாழ்வில் அன்னை முறைகளைக் கடைப்பிடிப்பது சிரமம். அன்னையைக் காண்பது அதைவிடச் சிரமம். பக்குவமான பக்தியுள்ளவர்க்கு முறைகளைவிட அன்னையைக் காண்பது எளிது. ஆண்டவனைக் காண முயன்ற சக்கிலிக்கு நாளைக்கு வருகிறேன் என்றார் ஆண்டவன். நாள் முழுவதும் கடந்தபின் அவன் ஏமாந்தபொழுது, ‘‘நான் பிச்சைக்காரனாகவும், உதவி வேண்டும் பெண்ணாகவும், கொடுமைப்படும் சிறுவனாகவும் வந்தேன். உன் உதவி பெற்றேன். அதில் நீ பெற்ற தரிசனம் ஆண்டவன் தரிசனமல்லவா?’’ என்றார் ஆண்டவன் என்பது டால்ஸ்டாய் எழுதிய கதை. வாழ்வில் ஆண்டவனைக் கண்டவன் சக்கிலி.



உள்ளே போய் மனோமயப்புருஷனை நாடுதல், நிர்வாணம் பெறுதல், சைத்தியப் புருஷனைக் காண்பதற்குப் பதிலாக இந்தச் சக்கிலிபோல உள்ளே அன்னையை மட்டும் தேடினால் நாம் நாடும் சைத்தியப் புருஷன் அன்னையாகக் காட்சி அளிப்பான். சைத்தியப் புருஷனைக் காண்பது யோகம். அன்னையை அதில் காண்பது யோக சித்தி.

ஆன்மா நிஷ்டையில் உள்ளே போனால் அன்னையைக் காணலாம். அது Bliss ஆனந்தம் தரும். அறிவாலும், செயலாலும் அன்னையை அகத்தில் தேட உதவுவது சமர்ப்பணம். சமர்ப்பணத்தை அன்னை ஏற்கவேண்டும் என விழைந்தால், அன்னை அதை ஏற்க முன்வந்து ஏற்றால், அன்னை நம் சமர்ப்பணத்தை ஏற்கும் நேரம் ஆனந்தம் (bliss), சிருஷ்டியின் ஆனந்தமாக (delight) மாறும். ஆனந்தத்தை பணத்திற்கு ஒப்பிட்டால், சிருஷ்டியின் ஆனந்தத்தை பணம் தரும் பயனுக்கு – சாப்பாடு, உடை, வசதி, பிரயாணம் – ஒப்பிடலாம். அது ஒருபடி உயர்ந்தது. பூரணயோகத்திற்குரியது.

- **உள்ளே போவது, புறத்தில் தேடுவதைவிட உயர்ந்தது.**
- **அதனினும் நன்று, உள்ளே அன்னையைத் தேடுவது.**
- **நாம் உள்ளே போவதைவிட ஆன்மா உள்ளே போக முயல்வது சிறப்பு.**
- **உள்ளே போன ஆன்மா, அதற்குரிய ஆன்மாவைத் தேடாமல், அன்னையைத் தேடுவது அடுத்தக் கட்டம்.**

- ❈ **அப்படி அன்னையை உள்ளே தேட ஆன்மாவாலும் முடியும், அறிவாலும் முடியும், செயலாலும் முடியும்.**
- ❈ **அத்தேடலுக்குரிய பலன் delight சிருஷ்டியின் ஆனந்தம்.**

யோகங்கள் பரமானந்தம், சத்தியானந்தம் போன்ற ஆனந்தங்களைக் குறிக்கின்றன. அவை குறிப்பது சச்சிதானந்தத்திலுள்ள ஆனந்தம். அது பூவுலகுக்கு வாராது. வந்தால் நிலைக்காது. அதை நிலைக்கச் செய்வது திருவுருமாறிய ஜடம். ஜடம் திருவுருமாறியபின் ஆனந்தம் (Bliss) அதனுள் வெளிப்பட்டால் அது சிருஷ்டியில் ஆனந்தம் (delight)ஆக மாறுகிறது. ஸ்ரீ அரவிந்தருடைய யோகத்தில்தான் இந்த ஆனந்தம் பேசப்படுகிறது. ஆனந்தத்திற்கு சிருஷ்டியுடைய ஜீவன் திருவுருமாறி இடம் அளித்தால் சிருஷ்டியில் ஞானம், அஞ்ஞானத்திலிருந்து எழுந்து பேரானந்தம் வெளிப்படும். இதுவே சிருஷ்டியில் இறைவன் தேடும் ஆனந்தம். இதற்காக ஏற்பட்டதே லீலை. சிருஷ்டிக்கே காரணம் இது என்கிறோம்.

*தொடரும்...*

☆ ☆ ☆

**ஜீவிய மணி**

மனம் தன்னையறியும், தன்னை மட்டும் அறியும்.



# இம்மாதச் செய்தி

**அன்பிற்காக உயிரை விடுவதே வாழ்வில் லட்சியம்.**

**அன்புக்காக வாழ முடியும் என்பது அன்னையின் அருள்.**

❈❈❈❈❈❈❈

To die for the beloved is an ecstasy life often offers. To live for the beloved in love is what Mother always offers and what man finds difficult to receive from Her.

லைப் டிவைன்

கர்மயோகி

## XI. Delight of Existence : The Problem

*Page No. 97*
*Para No. 13*

**The Human stage is one of the three.**
**It may be an all important stage.**
**It is a passage from the lower to the higher.**
**The human stage is only a temporary one.**
**We seek a total solution for the universe.**
**Ethics will admit only one stage.**
**Therefore we cannot apply ethics to our solution.**
**We cannot do otherwise.**
**That way we would run the peril of falsifying all the facts of the universe.**
**The evolution has a meaning behind us and beyond us.**
**It will become untrue.**
**Ethics is a temporary phenomenon.**
**To fashion a philosophy based on ethics is a half-evolved view.**
**It is a localised utility of things.**
**We cannot commit that error.**
**The world has three layers.**
**They are infra-ethical, ethical and supra-ethical.**
**To resolve the problem, we must embrace all the three layers.**
**It can be done by knowing what is common to all.**



## 11. ஆனந்தம் - கேள்வி

**மனித வாழ்வு மூன்றில் ஒன்று.**
**வெகு முக்கியமானது.**
**கீழிருந்து மேலே போகும் இடைநிலை மனித நிலை.**
**மனித வாழ்வு தற்காலிகமானது.**
**நாம் பிரபஞ்சத்திற்கு முழுமையான தீர்வு தேடுகிறோம்.**
**தர்மம் ஒரு நிலைக்குரியது.**
**எனவே தர்மம் நமக்குத் தீர்வு தாராது.**
**நாம் வேறெதுவும் செய்ய முடியாது.**
**அப்படிச் செய்தால் பிரபஞ்சத்தைப் பொய்யாக்க முனைவோம்.**

**நமக்குப் பின்னாலும், நம்மைக் கடந்தும் பரிணாமம் உள்ளது.**
**அது பொய்க்கும்.**
**தர்மம் தற்காலிகமானது.**
**தர்மத்தின் அடிப்படையில் தத்துவம் ஏற்பட்டால் அது அரைகுறை ஆகும்.**
**இன்று நமக்குத் தேவையானது.**
**நாம் அத்தவற்றைச் செய்ய முடியாது.**
**உலகம் மூன்று பிரிவுகளாக உள்ளது.**
**தர்மம், தர்மத்திற்குக் கீழ்ப்பட்டது, மேற்பட்டது என்பவை அவை.**
**மூன்று நிலைகளையும் தழுவிய முடிவு, பிரச்சினையைத் தீர்க்கும்.**
**மூன்றிற்கும் பொதுவானதன் மூலம் அத்தீர்வைக் காண முடியும்.**

*Page Nos. 97&98*
*Para No. 14*

**We have seen that common factor.**

**Sachchidananda is conscious-force of existence.**

**It develops into forms.**

**It seeks delight in that development.**

**Sachchidananda seeks this satisfaction.**

**This satisfaction is common to all three layers.**

**Its true beginning is this satisfaction.**

**This satisfaction is its delight.**

**This self-expression is normal to Sachchidananda.**

**Sachchidananda clings to it.**

**It is its base.**

**But it seeks new forms of itself.**

**In the passage to higher form, pain enters.**

**Suffering accompanies pain.**

**Pain and suffering contradict the fundamental nature of its being.**

**This and this alone is the root problem.**

*Contd...*

☆ ☆ ☆

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வெளியிலிருந்தாவது, உள்ளிருந்தாவது நம்மீது திணிக்கப்படுவது கட்டுப்பாடு.



**பொதுவான தத்துவத்தை நாம் அறிவோம்.**

**சச்சிதானந்தம் சத்தின் சித் சக்தி.**

**அது ரூபங்களை உற்பத்தி செய்கிறது.**

**இச்செயலில் அது ஆனந்தம் தேடுகிறது.**

**சச்சிதானந்தம் அத்திருப்தியை நாடுகிறது.**

**மூன்று நிலைகட்கும் பொதுவானது இந்தத் திருப்தி.**

**இத்திருப்தியே உண்மையான ஆரம்பம்.**

**இந்தத் திருப்தியே அதன் ஆனந்தம்.**

**தன்னை வெளிப்படுத்துவது சச்சிதானந்தத்தின் இயல்பு.**

**சச்சிதானந்தம் அதைப் பற்றியுள்ளது.**

**அதுவே அடிப்படை.**

**ஆனால் புது ரூபங்களை அது நாடுகிறது.**

**புதிய உயர்ந்த ரூபங்களை நாடும்பொழுது வலி ஏற்படுகிறது.**

**வலியுடன் துன்பம் வருகிறது.**

**வலியும், துன்பமும் ஜீவனின் அடிப்படை சுபாவத்திற்கு எதிரானவை.**

**இது மட்டுமே பிரச்சினைக்குரிய மூலம்.**

*தொடரும்...*

☆ ☆ ☆

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னை எந்த ரூபத்தில் (தோல்வி, வியாதி, etc.,) நம்மைத் தொடுகிறாரோ, அந்த ரூபத்தில் அன்னையை மனம் கண்டு கொள்வது (sincerity) உண்மையாகும்.

*எந்த ரூபத்திலும் அன்னையை அறிவது உண்மை.*

## அன்பரும் - நண்பரும்

அன்பர் - இரவு 1 மணிக்குக் கரண்ட் போய்விட்டது. Fan இல்லாமல் தூங்க முடியவில்லை. தியானத்தில் அமர்ந்து கரண்ட் வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். பொதுவாக அப்படிப் பிரார்த்தனை செய்தால் 5 அல்லது 10 நிமிஷத்தில் வரும். அப்படி வாராவிட்டால், நாள் முழுவதும் வாராது. கரண்ட் வாராத சமயங்களில் எனக்கு மனத்தில் பாரமாகப் பிரச்சினைகளிருப்பதுண்டு. நான் காலையில் ஊருக்குப் போக வேண்டும். தூக்கம் கெட்டுப் போனால், அது தொடர்ந்து வேலையைக் கெடுக்கும். 1½ மணி நேர பிரார்த்தனைக்குக் கரண்ட் வரவில்லை. **என் பிரார்த்தனைக்குக் கரண்ட் வாராது என நினைத்தேன். உடனே கரண்ட் வந்தது.**

நண்பர் - நம்மால் முடியாது என அறிவது ஒரு வகை சரணாகதி (negative surrender).

அன்பர் - கரண்ட் போகும்போது நான் என்ன நினைத்தேன் என எனக்குப் பொதுவாகத் தெரியும். இன்று நான் தூங்கும் பொழுது கரண்ட் போனதால், அது தெரியவில்லை.

நண்பர் - கரண்ட் போகும்பொழுதும், வரும்பொழுதும் மனதில் உள்ள நினைவு எல்லா விஷயங்களையும் தெளிவு படுத்தும். நம் மனத்தைக் கவனிக்க அது சிறந்த வழி.

அன்பர் - என்னால் முடியாது என்று அறிந்தவுடன் கரண்ட் வருகிறது என்றால் என்ன அர்த்தம்? ஏன் போயிற்று?

நண்பர் - சுமார் 7, 8 மாதங்களாகக் கரண்ட் ½ மணி நேரமில்லை என்ற பிரச்சினையில்லாமலிருந்தது.



அன்பர் - இந்த 7, 8 மாதமாக 5 நிமிஷம் கரண்ட்டில்லை என்பது கூட இல்லை என்று கூறலாம். 15 நாட்களுக்கு முன் எனக்கு ஜுரம் வந்தது. அன்றிரவு கரண்ட்டில்லை. அதிலிருந்து தினமும் ஒரு முறையாவது ½ மணி கரண்ட்டில்லை என்றிருக்கிறது.

நண்பர் - இது போன்று நடப்பதில் பொதுவாக உள்ள காரணங்கள் தெரியும். இம்முறை இது ஆரம்பித்தது ஏன் என நான் அறிவேன். நம்மை விட்டுப் போய் அன்னைக்கு எதிராக செயல்பட்டவர் ஒருவர் வந்த அன்றிலிருந்து இது ஆரம்பித்தது.

அன்பர் - பொதுவாக உள்ள காரணங்களைக் கூறுவீர்களா?

நண்பர் -

1. நம் உறவில் அன்னையை ஏற்காதவர் மனமில்லாமல் இப்பொழுது ஆதாயத்திற்காக ஏற்றுக் கொண்டு வர ஆரம்பிப்பது.
2. நம்மவர் மனத்தில் கல்யாணம், திருவிழா உற்சாகம் எழுவது.
3. அன்னைச் சேவையில் இருந்து கொண்டு எதிராக நடப்பவர் மனம் மாற முயல்வது, முயலும்பொழுது திணறுவது.
4. நாட்டின் எல்லையில் உள்ள நிலைமையை மனம் கண்டு கலங்குவது.
5. அதிகமாக அன்னையை ஏற்றவர், மேலும் ஏற்க முயல்வது.
6. பெரிய அதிர்ஷ்டம் வந்து வெளியே நின்று கொண்டு உள்ளே வர மிரட்டுவது.

அன்பர் - இவற்றையெல்லாம் ஒரே கருத்தாகக் கூறமுடியுமா?

நண்பர் - Receding low consciousness சுயநலம் குறைய மனம் பாடுபடுவது.

அன்பர் - சுயநலம் குறைந்தால் நல்லதுதானே.

நண்பர் - குறைந்தால் நல்லது என்று தெரிந்த பிறகு மனம் சுயநலத்தைவிட முயன்றால், உணர்வு விடமறுத்துப் போராடுகிறது.

அன்பர் - நமக்கு தீயசக்திகள் தாக்குதலால் இது நடக்காதா?

நண்பர் - இரண்டும் ஒன்றுதானே. அப்படிப்பட்ட தாக்குதலுக்குப் பின் முன்னேற்றம் வருகிறதல்லவா?

அன்பர் - எதிர்வீட்டுக்காரர் இந்த மாதம் அன்னைக்குப் பெரிய சேவை செய்தார். கரண்ட் அவருக்கும்தான் போயிற்று. **நமக்கு ஒரு சட்டம், அவருக்கு ஒரு சட்டமா?**

நண்பர் - அந்த சேவையே அவருக்குக் கரண்ட் போகக் காரணமாயிருக்கும்.

அன்பர் - அது எப்படி?

நண்பர் - அவர்கள் வீட்டில் 3 விதங்களாகச் சண்டை, தகப்பனார் பெண் சண்டை ஒன்று. சேவை இந்தக் குறைகளை எல்லாம் மீறி வியாபாரத்தைத் திடீரெனப் பெருக்கியது. புதிய உயர்ந்த நிலைக்குரிய, அஸ்திவாரம் ஏற்படும் வரை disharmony சுமுகமின்மை ஏற்படுமன்றோ? அதில் கரண்ட் நிற்பது முக்கியமானதாயிற்றே.



அன்பர் - இந்த 15 நாளில் எத்தனை முறை ஊர் முழுவதும் கரண்ட் இல்லாதபொழுது தியான மையத்தில் மட்டும் கரண்ட் இருந்தது? ஒரு நாள் கூட மையத்தில் முழுவதும் கரண்ட் இல்லாமலில்லை. ஒரு நாள் எதிர் வீட்டில் மட்டும் கரண்ட் இல்லாதபொழுது நான் கரண்ட் வர பிரார்த்தனை செய்தேன். சீக்கிரம் வந்து விட்டது.

நண்பர் - மனிதனைப்போல் பிறர் பாரத்தை ஏற்பது சத்திய ஜீவன் கடமையில்லை என்கிறார் பகவான்.

அன்பர் - நாம் பிறருக்காகப் பிரார்த்தனை செய்யக் கூடாதா?

நண்பர் - எதிர்வீட்டுக்காரருக்காகப் பிரார்த்தனை செய்தபின் நடந்ததைக் கவனித்தீர்களா?

அன்பர் - மறுநாள் முழுவதும் என் வீட்டில் கரண்ட் இல்லை.

நண்பர் - **கடமை, பரநலம், நல்லெண்ணம் உள்ள அளவுக்குப் பிறருக்காகப் பிரார்த்தனை செய்வது நல்லது, முறை.**

அன்பர் - ரேஷன் கார்ட் வாங்கப் போனேன். ஆபீசில் உள்ளவர்கள் கேலியாகச் சிரிக்கிறார்கள். வழக்கப்படி இல்லாமல் - மாமூல் கொடுத்து - நான் ரேஷன் கார்ட் கேட்டது அவர்களுக்கு அப்படியிருக்கிறது. எனக்குப் பணம் கொடுக்கச் சம்மதமில்லை.

நண்பர் - எந்த இடத்திலும் சுத்தமாக இருந்தால், இங்குப் பணம் கொடுக்கக் கூடாது, பல இடங்களிலும் நமக்குச் சௌகரியமாக நடந்து கொண்டு எங்கோ ஓரிடத்தில் சுத்தமாக நடந்தால் அது நடிப்பாக முடியும்.

அன்பர் - நான் வீம்பிற்காகச் செய்யவில்லை. எனக்குத் தெளிவில்லை. ரேஷன் கார்டு விஷயத்தை யோசனை செய்ய நினைத்தேன். அதே சமயம் ஆபீஸில் அதிக வேலை வந்ததால், ரேஷன் கார்ட் மறந்து போயிற்று.

இன்று காலையில் அந்த ஆபீஸில் வேலை செய்பவர் கார்டு சாங்ஷன் செய்து எடுத்துக் கொண்டு வந்து வீட்டில் எனக்குக் கொடுத்தார். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இவர் என் நண்பர். இந்த ஆபீசிற்குச் சென்ற மாதம் மாற்றலாகி வந்திருக்கிறார். என்னைப் பார்த்திருக்கிறார். நான் அவரைப் பார்க்கவில்லை. அவர் செய்த வேலை கார்டு வந்தது.

நண்பர் - **வேலையை மறந்தால், வேலை நடக்கும் என்பது சட்டம்.** சந்தர்ப்பம் மறக்கச் செய்தது. நாமே முனைந்து மறப்பது யோகம். எப்பொழுதும் ரேஷன் கார்டை நினைத்துக் கவலைப்படாமலிருப்பது நாம் செய்ய வேண்டியது. எனக்கும் ஓர் அனுபவம் உண்டு.

அன்பர் - முனைந்து மறந்தீர்களா?

நண்பர் - முனைந்து நினைவு வைத்திருந்த காரியம் 3 வருஷம் முடியாமற் போயிற்று.

அன்பர் - ஏன் மறக்க முடியவில்லையா?

நண்பர் - அது என் thesis. நல்லபடியாக எழுதி முடித்தேன். எங்கள் டிபார்ட்மெண்ட்டில் thesis கொடுத்து 6 மாதத்தில் டிகிரி பெற்றவரும் உண்டு. 5 வருஷங்களாக அப்படியே இருப்பதும் ஒருவர் அனுபவம். எனக்கு thesis கொடுக்கும்பொழுது அன்னையை நினைத்துக்



கொடுத்தேன். அன்னையை மீறி டிபார்ட்மெண்ட் பழக்கம் நினைவு வருகிறது. Thesisஐ நினைத்தால் அன்னை தவிர மற்ற எல்லா நினைவுகளும் வருகின்றன. 3 நாள் பிரார்த்தனையை மேற்கொண்டேன். பிரார்த்தனை நல்லபடியாக முடிந்து **மனம் அமைதியாய்விட்டது. இனி டிகிரி வாராவிட்டாலும் அமைதி போகாது என நினைத்தேன்**. ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது என்று கவலையாயிற்று.

அன்பர் - 3 நாள் பிரார்த்தனை தவறாது.

நண்பர் - 3 நாளும் நான் thesisஐயே நினைத்துக் கொண்டிருந்தேன். எப்படிப் பலிக்கும்? 1 வருஷமானபின் மணிக்கு, மணிக்கு அன்னையை நினைக்க முயன்றேன் hourly consecration. அது மறந்தே போயிற்று. ஆரம்பிக்க முடியவில்லை. 3½ வருஷம் முடிந்தது. 3 வருஷமானபின் thesisஐயே மறந்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டேன். அது மட்டும்தான் நினைவில் இருக்கிறது.

அன்பர் - எப்படி மறந்தீர்கள்?

நண்பர் - சரணாகதியைப் பற்றிய கட்டுரை ஒன்றில் சரணாகதியைப் புரிந்து கொள்ள சரணாகதியே சிறந்த முறை என்று படித்தேன்.

அன்பர் - என்ன சொல்கிறீர்கள், விளங்கவில்லையே.

நண்பர் - எனக்குப் படித்தவுடன் மனத்தில்பட்டது. என்ன பட்டது என்று புரியவில்லை. கட்டுரை முழுவதும் படித்தேன். இக்கருத்தைக் கூறியவர் அதை விளக்கவில்லை.

அன்பர் - சரணாகதியைப் புரிந்து கொள்ளவா அல்லது சரணாகதியைச் செய்யவா?

நண்பர் - நான் புரிந்து கொள்ள சரணாகதி பயன்படும் என்பதைக் கருதினேன். இரண்டொரு நாள் இதே யோசனையாக இருந்தபிறகு பளிச்செனப் புரிந்தது.

அன்பர் - என்ன புரிந்தது?

நண்பர் - புரிந்து கொள்ள நாம் அறிவை நம்புகிறோம்.

அன்பர் - சரி.

நண்பர் - **புரிந்து கொள்ள சரணாகதியைப் பயன்படுத்த வேண்டும் எனப் புரிந்தது.**

அன்பர் - அதாவது, புரிந்து கொள்ள முயலக் கூடாது.

நண்பர் - ஆம். அது புரிந்தவுடன் மனப்பாரம், occupation விட்டுப் போயிற்று. மறுநாள் காலையில் எழுந்தபொழுது உலகமே புதியதாகத் தோன்றியது.

அன்பர் - அப்படியிருந்தால் காரியம் முடியும்.

நண்பர் - எனக்கு 3½ வருஷத்தில் அன்றுதான் thesis மறந்து போயிற்று. என் பேராசிரியருக்கு பெரிய உத்தியோகம் வந்துவிட்டது, போகிறார் என்ற செய்தி அன்றே கிடைத்தது. Reader பேராசிரியர் இடத்திற்கு தற்காலிகமாக inchargeஆக வந்தார். **Thesis வந்து காத்திருப்பது அவருக்குப் பிடிக்காத விஷயம்**. உடனே விஷயம் நகர ஆரம்பித்தது. சீக்கிரம் முடிந்தது.

அன்பர் - நாமே முனைந்து விஷயத்தை மறக்க முடியாதா?



நண்பர் - அதற்கு அதிக நம்பிக்கை வேண்டும்.

அன்பர் - வேறு வழியில்லையா?

நண்பர் - வேலையை விட நாம் பெரியவராக இருந்தால் நினைவு பாதிக்காது.

அன்பர் - நாம் சிறியவராக இருப்பதால்தானே பிரச்சினை வருகிறது.

நண்பர் - அன்பர் பெரியவர் என்பதை மனம் நம்ப வேண்டும். எனக்கு 3½ வருஷத்தில் கிடைத்த ஞானம் இவை.

அன்பர் - அன்பர் பெரியவர் என்றால் எப்படி?

நண்பர் - ஒரு பெரிய குடும்பம், பெரிய இடத்து உத்தியோகம், உயர்ந்த படிப்பு, உயர்ந்த ஜாதி ஆகியவை ஒருவரைப் பெரியவராக்குவதுபோல், **அன்னை அன்பர் என்பதால் அவர் பெரியவர்.**

நண்பர் - அது தவறாகாதோ?

அன்பர் - உத்தியோகம், பணம், அந்தஸ்து தருவது உண்மை. அதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் தவறு. அகந்தை ஏற்றுக் கொள்வது தவறு.

நண்பர் - Thesisஐ விட நான் பெரியவன் என்றால் thesis என்னை உலுக்காது. அன்றாடக் காரியங்களைவிட நாம் பெரியவர் என்பதால் அவை நம்மை உலுக்கவில்லை. அதுபோல் நான் அன்னை அன்பன் என்பதால் thesis எனக்குச் சிறியது.

அன்பர் - நான் வேறு, என்னில் அன்பர் வேறு என்று கருத வேண்டும்.

நண்பர் - நான் என்பது அகந்தை. அன்பர் என்பது அந்தஸ்து. அந்தஸ்து செல்வாக்குத் தரவேண்டும். அகந்தையை வலுப்படுத்தக் கூடாது.

அன்பர் - நாம் முக்கியம் என்ற எண்ணமில்லாமல், நம்முள் உள்ள அன்பர் முக்கியம் என மனம் உணர்ந்தால், எந்தக் காரியமும் மனத்தை உலுக்காது என்று கூறுகிறீர்களா?

நண்பர் - **அந்தத் தெளிவு எனக்கு முன்பேயிருந்திருந்தால்** thesis **என்னை ஆட்டிப்படைத்திருக்காது.**

அன்பர் - அது பல பேருக்கு நடக்கிறது. நாங்கள் குடி இருக்கும் இடத்தில் 50 flats உண்டு. பொதுவான maintenance ஏற்பாடுண்டு. என் பக்கத்து வீட்டு அன்பர் மாலை 8 மணிக்கு வெளி பல்ப் எரியவில்லை என்று கண்டார். அது ஒன்றும் அவசியமில்லை. அவர் சிறப்பான அன்பர். உடனே புது பல்ப் போடுபவர். மணி 8 ஆகிவிட்டது. மறு நாள் முதல் வேலையாக அதைச் செய்ய முடிவு செய்தார். இரவு 10 மணிக்கு வெளியே வந்தவர் maintenance ஆள் பல்ப் போடுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டு விசாரித்தார். அவன் மறுநாள் லீவு என்பதால் முதல் நாளே முடிந்தவரை உள்ள வேலைகளை முடிக்க நினைத்து, இந்த பல்பைப் பார்த்து புதுப்பித்தேன் என்றான். இது silent will. நடக்கிறது.

நண்பர் - பல்ப்க்கு நடப்பது விசேஷம். Thesisக்கு நடந்தால் பெரிய விசேஷம்.



அன்பர் - ஏன் அங்கு நடப்பதில்லை?

நண்பர் - நமக்குப் பல்ப் சிறியது, thesis பெரியது. அன்பருக்கு இரண்டும் ஒன்று என்ற தெளிவு வரவில்லை.

அன்பர் - நீங்கள் சொல்வதில் 3 விஷயங்கள் உள்ளன.

1. விபரம் தெரியாதது.
2. தெரிந்தாலும், நேரம் வரும்பொழுது விபரம் தெரியாதது போலவே நடக்கிறோம்.
3. விபரம் தெரிந்தாலும், மனம் கட்டுப்படுவதில்லை.

நண்பர் - அன்னை மீது அதிக நம்பிக்கை வேண்டும் என நான் முதலில் சொன்னது அதுவே. நாம் எவ்வளவு படித்தாலும், அன்னையை சிவன், விஷ்ணு போன்ற தெய்வமாகவே எடுத்துக் கொள்கிறோம்.

அன்பர் - நமக்குச் சிவனும் புரிவதில்லை, விஷ்ணுவும் புரிவதில்லை, அன்னை புரிவதே இல்லை. எல்லாம் தெய்வம். பிரார்த்தனை பலித்தால் சக்தி வாய்ந்த தெய்வம். இல்லாவிட்டால், இல்லை. Life Divine படித்தால் தெம்பாக இருக்கும் என்று தெரியும். என்னுடைய தம்பிக்கு இரண்டு நாளாக நல்ல ஜுரம். மாத்திரை சாப்பிட சண்டி செய்கிறான். தானே போகும் என்றும் கூறுகிறான். மூன்றாம் நாள் ஜுரம் மேலும் 1° அதிகமாயிற்று. சும்மாயில்லாமல் Life Divine சொற்பொழிவுக்கு வந்து அங்குச் சில உதவி செய்தான். இரவு ஜுரம் போய்விட்டது. பிறகு வரவேயில்லை.

நண்பர் - **Life Divine சொற்பொழிவு கேட்பவர் அனைவருக்கும் தெம்பு வரும்.**

அன்பர் - அன்னை எழுதிய எந்தப் புத்தகம் படித்தாலும் தெம்பு வரும் என்பது என் அனுபவம். அவர் சம்பந்தமான எந்த வேலையும் தெம்பு அதிகரிக்கும். இதுவரை என் சுபாவம் எனக்கே பிடிக்கவில்லை. இனி நான் அன்னைக்கு உகந்தவராக மாறிக் கொள்ள விருப்பப்படுகிறேன்.

நண்பர் - **மாற விருப்பப்படுகிறேன் என்பதை விட உயர்ந்த மனப்பான்மையில்லை.** அப்படிப்பட்டவர் முயன்றால் வாழ்வில் அவரால் சாதிக்க முடியாததில்லை.

அன்பர் - நான் எப்படியெல்லாம் மாறவேண்டும் எனக் கூறுவீர்களா?

நண்பர் - ஒரு சட்டம் முக்கியம்.

**1. உங்களுக்குத் தெரிந்த குறைகளை மற்றவர் சொல்லக் கூடாது. அவற்றை எல்லாம் நீங்கள் மாற்றியபின் பிறர் உங்களுக்குத் தெரியாததைச் சொல்லலாம்.**

**2. எல்லோருக்கும் நம்மைப் பற்றிய குறை தெரிந்திருந்தும் நமக்கு அவை தெரியாதிருக்கும். அவற்றைச் சொன்னால் தான் புரியும். சொன்னாலும் புரியாதவையுண்டு.**

அன்பர் - முதல் பட்டியலை ஆரம்பிக்கு முன் இரண்டாம் பட்டியலை அறிய விரும்புகிறேன்.

நண்பர் - அந்த மனப்பான்மை "எதுவும் செய்ய இஷ்டமில்லை" என அறிவிக்கும் மனப்பான்மை.

அன்பர் - நான் எங்கு ஆரம்பிக்கலாம் என்றாவது கூறுவீர்களா?

நண்பர் - எது உங்கள் வாழ்வில் அதிகத் தொந்தரவாக இருக்கிறதோ அங்கு ஆரம்பிப்பது நன்று.



அன்பர் - புரிவதற்குச் சரணாகதியைப் பயன்படுத்தலாம் என்றீர்களே அதையாவது விளக்கக்கூடாதா?

நண்பர் - "நாம் முயன்று புரிந்துகொள்ள முடியாது" என்ற நிதானம் சரணாகதி போன்றது. அது இருப்பதில் அதிகக் கடினமானது. உங்களுக்கு இன்று பிரச்சினையாக இல்லாதது.

அன்பர் - எதையும் பிறர் கோணத்தில் அறிவது என்பதைப் பயிலலாமா?

நண்பர் - அது சத்தியஜீவிய நோக்கம். மிக உயர்ந்தது. சிறப்பானது.

அன்பர் - என் மனைவி எப்பொழுதும் குறை சொல்வாள். அவள் சொல்வது அனைத்தும் அவள் பார்வையில் சரி எனக் கொண்டு செயல்படலாமா?

நண்பர் - மிக உயர்ந்த discipline. தாங்குமா? செய்தால் பெரும் வெற்றியுண்டு. உங்கள் உலகமே தலைகீழே மாறிவிடும். அடையாளமே தெரியாது.

அன்பர் - அப்படி என்ன பெரிய விஷயம் அது?

நண்பர் - மனைவி வாழ்வு மையம். அது மாறினால் வாழ்வு பலமடங்கு உயரும். ஈஸ்வரன் சக்தியிடம் பயின்றது. சிருஷ்டிக்கே சிறப்பாக உரியது.

☆ ☆ ☆

## p.32 And love is a yearning of the One for the One.

**ஆண்டவன் தன்னைப் பிறரில் அன்பாகக் காண்பதே காதல்.**

- ❒ ஒன்றின் இருமுகங்கள் அன்பின் திருமுகங்கள்.
- ❒ ஓராயிரம் உள்ளங்கள் ஒன்றாகத் துடிக்கின்றன.
- ❒ அனைவரின் உண்மைகளின் ஒரு சத்திய வடிவம்.
- ❒ கதிரான எண்ணங்கள் கதிரவனில் குவியும்.
- ❒ வரையறையற்ற வளர்மதியின் வண்ணங்களை அறிவோம்.
- ❒ தெய்வீக விவேகம் சொல்லிழந்த பிரம்மமாகிறது.
- ❒ அனந்தத்தின் அமைதியில் தனித்துக் கொலுவிருந்தது.
- ❒ அசைவற்ற ஞானதிருஷ்டி அரசவையின் தனிச்சிறப்பு.
- ❒ சொற்கள் தேவைப்படாத கருத்து.
- ❒ எண்ணம் எல்லையற்ற வண்ணத்தில் குடியேறியது.
- ❒ இருக்க இடமின்றி அமரத்துவம் களைத்துச் சலித்தது.
- ❒ எண்ணச் சிற்பங்களில் எழிலுடன் எழ முன்வரவில்லை.
- ❒ சன்னலில் மடங்கிய சதுரங்கப் பார்வை.
- ❒ ஆண்டவனின் அகன்ற வானத்தின் சிறு மூலை.
- ❒ அங்கிருந்தால் அவனியை விட அகன்று வாழலாம்.
- ❒ மூலை சிறிதெனினும், மூர்த்தி பெரியது.
- ❒ அது ஜட உலகின் எண்ண வண்ணமன்று.
- ❒ விழித்தெழுந்த மௌனம் விருவிருப்பாய்ப் பரவியது.
- ❒ குரலற்ற ஜோதியின் குதூகலம்.



- ❒ திருஷ்டிக்கு அகப்படாத திருவுருவம்.
- ❒ வாழ்க்கை அறியாத வீறுகொண்ட வளம்.
- ❒ அமைதியின் ஜீவியம் அனைத்தையும் உட்கொண்டது.
- ❒ சொல்லால் மனத்தை உணர்த்தும் குரல்.
- ❒ ஆத்மாவின் மௌனத்தில் அதிரும் ஞானமாகும்.
- ❒ செயலில் தன்னை அறியும் வலிமை.

உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது, ஒன்று பலவான வகையென்ன என்றறிய நமக்குத் தகுதியில்லை என்றோர் பண்டைய ரிஷிகள். ஆனால் அவ்வுலகின் அனைத்து அம்சங்களையும் அவர் அறிவார். ஸ்ரீ அரவிந்தம் அதற்கு முழுப் பதில் தருகிறது. அதையும் கடந்த உலகம் நெகிழ்ந்து விழையும் இலட்சியமே அதன் கரு எனவும் கூறி,

**இறைவனின் காதலை இயற்கையிலும் அனுபவிக்க ஏற்பட்டது உலகம்.**

சிருஷ்டியின் காரணம் காதல், சிருஷ்டியின் செயல்பாடு காதல், சிருஷ்டி இயற்கையில் ஏற்படுத்துவது காதல், நாடுவதும் காதலே. லீலை காதலுக்காக ஏற்பட்டது என்ற ஆன்மீக உண்மையை தலைப்பு ஸ்ரீ அரவிந்தத்தின் சொற்களில் கூறுகிறது. இறைவன் பிறரில் தன்னைக் கண்டுகொள்ளும் உணர்வான காதலை நாடி காலத்தைச் சிருஷ்டித்தான். காலத்தின் கதியை காதலின் கையில் ஒப்படைத்தான். நடக்கும்பொழுது மனிதனடி மண்ணில்படுவதும், விதை முளைத்துச் செடியாவதும், உதய சூரியன் உதயமாவதும், ஒருவரையொருவர் வெறுப்பதும், கொலை செய்வதும், இளம்பெண்ணின் மனத்தில் மயங்கி மருகும் காதலும் ஒன்றே என்பது இப்பக்கத்தின் பல வரிகளில் காணும் தத்துவங்கள்.

☆ ☆ ☆

## தீபாவளி - திருவுருமாற்றம்

*(நவம்பர் 17, 2002 அன்று கும்பகோணம் தியான மையத்தில் திரு. P.V. சங்கர் நிகழ்த்திய உரை)*

நரகாசுரன் அழிந்த நாள் தீபாவளி. தீபாவளி கொண்டாடப் படுவதைப்போல் நம் நாட்டில் எந்தப் பண்டிகையும் கொண்டாடப்படுவதில்லை. இதை மகாலட்சுமியின் வருகையாகக் கொண்டாடும் சம்பிரதாயமும் உண்டு. அசுரன் அழிந்து அதிர்ஷ்டம் வரும் நாள் தீபாவளி என நாம் கொள்ளலாம்.

**தீமையை அழிக்க வேண்டும் என்பது உலகம்.**

**தீமை என்பது தீமையில்லை, திருவுருமாறும் நன்மை என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

வரலாறு என்பதை அரசர்கள் வரலாறாக எழுதினார்கள். பின் நிகழ்ச்சிநிரலாக எழுதினார்கள், மக்கள் வரலாறாக எழுத முனைந்தார்கள். ஆங்கிலேயர் ஒருவர் வரலாற்றை தத்துவமாக எழுத முயன்றார். இது புது முயற்சி. அவர் முயற்சி வெற்றி பெற்றுப் பூர்த்தியாயிற்று. 10 வால்யூம்கள் வெளியிடப்பட்டன. அதில் அவர் கூறும் தத்துவங்களில் ஒன்று,

**மனிதன் நாகரீகம் பெற்றால், வெளியிலிருந்து அசுரன் வந்து நாகரீகத்தை அழிக்கிறான். அதுபோல் ரோமாபுரி அழிந்தது என்கிறார். இது உலக வரலாற்றின் வழக்கம் என்கிறார்.** ஸ்ரீ அரவிந்தர் 1919இல் The Life Divineஇன் கடைசி அத்தியாயத்தில் உலகம் புற அசுரனால் அழிக்கப்படும் நிலை மாறினால் அக அரசன் அவ்வேலையை மேற்கொள்வான் என்கிறார். இந்த மேற்கோளைப் படித்த அந்த ஆங்கில வரலாற்றாசிரியர் "அதுவே என்னுடைய கருத்துமாகும்" என்கிறார்.



அசுரன் அழிந்த தீபாவளி அனைவருக்கும் அளவுகடந்த சந்தோஷம் தரும் நேரம் என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இது புற அசுரன். உள்ளேயுள்ள அசுரன் அழிவது 'சாவித்திரி'யில் எமன் அழிவதாகும். நாம் தீபாவளியைக் கொண்டாடும்பொழுது நரகாசுரனை நினைப்பதில்லை. அவன் அழிந்ததையும் கருதுவதில்லை. நாம் நம் குதூகலத்தைக் கொண்டாடுகிறோம். 1971இல் இந்திரா கட்சியை இரண்டாகப் பிரித்தார். தம் கட்சி சிறுபான்மையாயிற்று, இதரச் சிறு கட்சிகள் உதவியை நாடினார். **அன்னையின் அருள் தேடி வந்தார்**. அமோக வெற்றி பெற்றார். வெளியிலிருந்து வரும் எதிர்ப்பு திறனற்றுப் போயிற்று. எதிர்க்கட்சி வலுவாக உள்ளபொழுது நம் உட்கட்சிப் பூசல்கள் மறையும். எதிர்கட்சிக்கு வலுவில்லாவிட்டால் உட்பூசல் அபரிமிதமாகும். தன்னிஷ்டப்படி நடக்கத் தோன்றும். சஞ்சைகாந்தியின் ஆர்ப்பாட்டம் தலை விரித்தாடியது. 1977இல் அனைத்தும் அழிந்தது. மீண்டும் இந்திராவுக்கு அன்னை அருள் 1980இல் மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தது. மீண்டும் உள்ளே கொந்தளிப்பு. இந்திராவைப் பாதுகாக்க வேண்டிய செக்கூரிட்டியே அவரைச் சுட்டுக் கொன்றான். அகத்தின் அசுரனிடமிருந்து இந்திராவுக்கு பாதுகாப்பில்லை. மீண்டும் ராஜீவுக்கு அதைவிடப் பெரிய வெற்றி. **இதுவரை புறத்திலிருந்து அழித்த அசுரன், அகத்தில் புகுந்து உயிரை அழித்தான். அடுத்த கட்டத்தில் அவ்வசுரன் நாணயத்தை அழித்தான். அனைத்தும் அழிந்தது. ராஜீவ் தோற்றார், கொல்லப்பட்டார்.** அன்று வீழ்ந்த காங்கிரஸ் இன்றுவரை எழுந்திருக்க முடியவில்லை.

வேதம் அசுரர்களைப் பற்றிப் பேசுகிறது. தவம் செய்யும் விஸ்வாமித்திரரை தொந்தரவு செய்ய மேனகை வருகிறாள். அசுரன் காமக்குரோதமாக மனத்துள்ளிருந்து எழுகிறான். சூர்ப்பனகையின் மூக்கை இலக்குவன் அறுக்கலாம். உள்ளிருந்து விஸ்வாமித்திரருக்கு எழும் பொறாமையை அவரே அழிக்க வேண்டும். மேனகை வெளியிலிருந்து வந்து உள்ளேயுள்ள காமவுணர்வை எழுப்பி அவர்

தவத்தை அழிக்கிறாள். அசுரன் எப்படி உள்ளே வந்தான்? அஞ்ஞானம் அசுரனாக உள்ளே கொலுவிருக்கிறது.

**நாம் அறிந்த வழிபாட்டு முறைகள் உள்ளேயுள்ள அசுரனை சுபாவம் என அழைக்கிறது**. மனிதனால் சுபாவத்தை எதிர்க்க முடியாது, அழிக்க முடியாது. அவன் தன் சுபாவத்தையொட்டியே போக வேண்டும் என நாம் பயிற்றுவிக்கப்பட்டுள்ளோம். அன்னை கூறுவது திருவுருமாற்றம். இது உலகுக்குப் புதிய கருத்து. நாட்டு வழக்கில் life-style அநேகமாக எல்லாமும் மாறுகிறது. ஆனால் மதவழிபாடு எந்த மதத்திலும் மாறும் அறிகுறிகளில்லை. ஸ்ரீ அரவிந்தம் அதைச் செய்ய முன் வந்தது. அது வழிபாட்டை மாற்ற முயலவில்லை. அதற்குப் பதிலாக ஆன்மீகப் பயிற்சியை ஏற்கும்படிக் கூறுகிறது.

* **மதம் தீமையை விட்டு விலகுகிறது.**
* **ஆன்மீகம் தீமையை திருவுருமாற்றுகிறது.**

இவையெல்லாம் தத்துவங்கள். தீபாவளிப் பண்டிகை. நடைமுறைக்கேற்ப தத்துவம் பேசுமா? பேசும்.

வீட்டில் திருமணம் வந்தால் மனஸ்தாபங்கள் விலகி மனம் இணையும். திருமணம் மனஸ்தாபத்திற்கு ஆரம்பமாகவும் இருப்பதுண்டு. பண்டிகை சந்தோஷமான நேரம். சந்தோஷத்தை யார் அனுபவிப்பது என்பதில் மனிதச் சுபாவம் - போட்டி, பொறாமை - வெளிப்பட்டால் பண்டிகையே விகற்பத்திற்கு வித்தாகும். அன்னை மனிதனைத் தெய்வத்தைக் கடந்த இறைவனுக்கும், யோகத்திற்கும் அழைக்கின்றார். மனிதன் அவனுக்கே இயல்பான சுபாவத்தை நாடுகிறான்.

* **சுபாவம் திருவுருமாறும் என்பது அன்னை கொள்கை.**
* **கீதை சுபாவத்தின் பெருமையைக் கூறுகிறது.**
* **பிறருடைய உயர்ந்த சுபாவத்தைப் பின்பற்றுவதைவிட நம் தாழ்ந்த சுபாவத்தைப் பின்பற்றுதல் பலன் தரும் என்பது கீதை. மனிதனுடைய திறமையைக் கடந்தது சுபாவம் என்று கீதை கொள்கிறது.**
* **ஸ்ரீ அரவிந்தம் மனிதன் சுபாவத்தைவிட உயர்ந்தவன் எனக் கொள்கிறது.**
* **தான் எங்கிருக்க வேண்டும் என மனிதனால் நிர்ணயிக்க முடியும் என்று அன்னை கூறுகிறார். அதனால் திருவுரு மாறும்.**
* **“நாங்கள் எளிய மனிதர். எங்களுக்குப் புரியும்படி ஸ்ரீ அரவிந்தத்தைக் கூற முடியுமா?” என்பது அன்பர்கள் நிலை. முடியும் என்பது அன்னை பதில். அது முடிந்தால் புற அசுரனும், அக அசுரனும் அழிந்து தீபாவளி தினமும் கொண்டாடி, நாமும் உலகமும் தீமையிலிருந்து விடுபடுவோம்.**

**ஒரு சோதனை :**

நமக்குப் பிரச்சினைகட்குக் குறைவில்லை. நம் அனுபவத்தில் நடக்காத விஷயங்கள் பல. “நான் உழைக்கப் பிறந்தவன். பிறர் எளிதாகச் சாதிப்பதை நான் பல தோல்விகள், சங்கடங்களுக்குப் பின் பெருமுயற்சியால் சாதிப்பது என் இராசி” என்பது ஒருவர் அனுபவம். அவரை இச்சோதனை செய்யும்படி அன்பர் ஒருவர் கூறினார். “உங்கள் இராசி உண்மை. ஆனால் அதைவிடப் பெரிய சக்தி 1956இல் புவியில் வந்துள்ளது. அதற்கு இராசியை மாற்ற முடியும், கர்மத்தைக் கரைக்க முடியும். சுபாவத்தை அழிக்க முடியும்” என்பதை அவர் ஏற்பதுபோல் பேசினார், “நான் எப்படி அந்த சக்தியைப் பெற முடியும்?” எனக் கேட்டார்.

**நம்புவது பெறுவதாகும்.**

அவருக்கு கொஞ்சம் நிலம் உண்டு. ஆற்றுப் பாசனமுள்ள இடம். ஒரு போகம் பயிராகும். அடுத்த போகம் செய்ய கிணற்றுப் பாசனம் வேண்டும். அப்பகுதியில் நீரூற்று கொஞ்சம். ஒரு போர் கிணறு இறக்கவேண்டுமானால், பல இடங்களில் தோண்டிப் பார்க்கவேண்டும். இவர் கேட்பது, “என் பக்கத்து நிலத்துக்காரர்

தொட்டனவெல்லாம் கூடிவரும். அவர் 11 இடங்களில் தோண்டினார். 11ஆம் இடத்தில் ஊற்று கிடைத்தது. என் இராசிக்கு என்ன வரும் எனத் தெரியவில்லை" என்றார். அன்பர் கூறியதை ஏற்று இவரும் போர் தோண்டினார். முதலிடத்தில் ஊற்று கிடைத்தது! நமது இராசி என்பது நம் சுபாவம் வெளிப்படும் இடம். தோல்வி என்பது இருளான கெட்ட சுபாவம். கோபம் கெட்டது. எவ்வளவு முயன்றாலும் கட்டுப்படாது. கோபத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி உலகிலில்லை. ஆனால் புதிய சக்தி உலகில் 1956இல் வந்துள்ளது. இது அன்னை சக்தி. அதை நம்பினால் செயல்படும். நம் கோபத்தை அது கட்டுப்படுத்தும். இந்த விவசாயியின் இராசியை அன்னை சக்தி மாற்றியது அவர் அனுபவம்.

- **நம்மால் கட்டுப்படுத்த முடியாத சுபாவத்தை அன்னை கட்டுப்படுத்துவார். அவர் அதைச் செய்ய நாம் அன்னையை நம்பவேண்டும்.**
- **மனிதன் அன்னையை நம்புவதுதான் சரணாகதி என்கிறார் பகவான்.**

* சர்க்காருக்குக் கடிதம் எழுதி பதில் பெறுபவரில்லை. ஒருவர் மனையை சர்க்கார் தம் காரியத்திற்காக எடுத்துக்கொண்டு உத்தரவு பிறப்பித்தபின், அவர் அன்னையை நம்பி, சர்க்காருக்குக் கடிதம் எழுதினார். நல்ல பதில் 4ஆம் நாள் தந்தியாக வந்தது. எவரும் நம்பமுடியாதது!
* இதுபோன்ற பெரிய பிரச்சினைகள், சிறிய பிரச்சினைகள் நம் வாழ்வில் பல உள்ளன. அவற்றுள் ஒன்றை இந்த சக்தியை நம்பி செய்தால் மேற்சொன்ன பலன் கிடைக்கும். அது சொந்த அனுபவம். அந்த அனுபவமில்லாமல் கீழ்க்கண்டவை புரியும். அனுபவம் முழுவதும் புரிய உதவும்.
  - **உலகில் அசுர சக்திகள் உலவுகின்றன.**
  - **அயல்நாட்டு எதிரியை அழிக்க இராணுவம் உதவும்.**



- **உள்நாட்டு அராஜகத்திலிருந்து போலீஸும், கோர்ட்டும் காப்பாற்றும்.**
- **கணவனின் கொடுமையிலிருந்து தப்பிக்க இதுவரை வழியில்லை.**
- **கணவனும் புற அசுரனாவான்.**
- **நம் கோபம், பொறாமையிலிருந்து நம்மை யார் காப்பாற்றுவார்?**
- **நரகாசுரன் புற அசுரன்.**
- **பொறாமை அகத்தீமை.**
- **அகத்தீமை அனைத்தையும் அழிக்கவல்லது.**
- **அகம் தூய்மையானால் அதிர்ஷ்டம்.**
- **அகம் ஆழ்ந்து தூய்மையானால் அருள்.**
- **புறத்தைத் தன்னுள்ளே கொண்ட அகம் தூய்மையாவது பேரருள்.**
- **அகத்தின் ஆழ்ந்த தூய்மை துறவறத்தின் தூய்மையுள்ள இல்லறம்.**
- **அகத்தூய்மை சத்தியம்.**
- **சத்தியம் சத் என்ற அகத்தின் புறம்.**
- **சத்தியம் ஆன்மாவின் அலங்காரம்.**
- **தீபாவளி புறவிடுதலை தருவது.**
- **அகவிடுதலை தரும் தீபாவளிக்கு நாம் செய்யவேண்டியது என்ன?**
- **நமது கெட்ட சுபாவங்களைப் பாராட்டாமல், அவை சரி என நினைக்காமல், அவற்றை அழிக்க முடிவு செய்து, முடிவை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், சமர்ப்பணம் செய்த அளவுக்கு அவை நமக்கு விடுதலையளிக்கும்.**

→ **சமர்ப்பணம், சரணாகதியானால், விடுதலை நிரந்தரமாகும்.**

தீபாவளி புறத்திலிருந்து அகத்திற்கு வந்து தினமும் கொண்டாடப்படும்.

**சூழல் :**

வரப்போகும் மழை கருமேகக் கூட்டமாக இருண்டு வரும். இது மழை வரும் அறிகுறி. நாம் அதையறியாவிட்டாலும் எறும்பும், ஈசலும் அதை அறிவிக்கும். மேடைப் பிரசங்கமும், சுவரொட்டியும் எலக்ஷன் வருவதையும், வந்துவிட்டதையும் காட்டும். பட்டாசு வெடித்து தீபாவளியை அறிவுறுத்துகிறது. ஆழ்ந்த மன அமைதியும், இதுவரை அனுபவிக்காத சந்தோஷமும் அன்னை சூழலுக்குரியன. பாண்டிச்சேரியை 7½ மைல் அளவுக்கு அவை சூழ்ந்துள்ளன என்பதை அன்பர்கள் அறிவார்கள். அன்னை கூறியுள்ளார். அன்னையின் திருவுருவப்படம் உள்ள இடங்களில் இச்சூழல் உண்டு. ஒரு முதலாளி பொதுமக்களிடமிருந்து சட்டப்படி பலகோடிகள் டெப்பாசிட்டாகப் பெற்றார். பெற்ற பணத்தை முதலீடு செய்தார். முதலீட்டுக்காகப் பெறப்பட்டது டெப்பாசிட். பொதுமக்கள் நம்பிக்கையால் செயல்படுபவர்கள். சட்டம் அவர்கட்கு இரண்டாம்பட்சம். எவனோ ஒருவன் புரளியைக் கிளப்பிவிட்டான். அனைவரும் ஒரே நேரத்தில் டெப்பாசிட்டைத் திரும்பக் கேட்கின்றனர். சட்டம் அவருக்குச் சாதகமாக இருந்தாலும், நிலைமை மோசமாகிறது. சிம்மசொப்பனமாகிவிட்டது. அவர் நண்பர் ஓர் அன்னை படம் அனுப்பினார். ஆர்ப்பாட்டம் ஓய்ந்து அமைதியாயிற்று. அசுரச் சூறாவளியின் அட்டகாசமும் அன்னைப் படத்தின் சூழலின்முன் தலை வணங்குகிறது. அன்னையை நெடுநாளாக அறிந்த அன்பர்கள் ஜாதகம் பார்க்கமாட்டார்கள். ஆனால் வீட்டிலுள்ளவர்கள் அவர்கள் ஜாதகத்தைப் பார்க்க நேரிடும். அதில் வெளிவருவது இரண்டு,

1) *அன்பர் வாழ்வில் ஜாதகத்திலில்லாத நல்லது நடந்துள்ளது.*



2) *ஜாதகப்படி நடக்கவேண்டிய கெட்டது நடக்கவில்லை.*

1994இல் ஓர் அன்பர், ‘‘எனக்கு அன்னையைச் சில வருஷங்களாகத் தெரியும். பலிக்காத பிரார்த்தனையில்லை. இப்பொழுது பிரச்சினைகளைக் காணோம். வாழ்க்கையில் பிரச்சினைகளேயில்லையோ எனத் தோன்றுகிறது’’ என்றார்.

1980இல், 4, 5 குடும்பங்கள் சேர்ந்து பேசிக்கொண்டிருந்த நேரம், முக்கியமாகப் பேசுபவை,

1) *வீட்டில் சண்டையும், சச்சரவுமாகயிருக்கிறது.*

2) *ஏன் வீட்டிற்குப் போகவேண்டும் எனத் தோன்றுகிறது.*

3) *சம்பாதிப்பனவெல்லாம் டாக்டருக்குப் போகிறது.*

4) *காலையில் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதும், கணவர் ஆபீசுக்குப் போவதும் அமர்க்களம்.*

5) *இந்தக் காலத்தில் படிக்காமல் என்ன செய்வது? பிள்ளைகள் படிப்பதைத் தவிர மற்றனவெல்லாம் செய்கிறார்கள்.* T.V. *வந்தாலும் வந்தது, புத்தகம் மறந்துபோய்விட்டது.*

அங்கு ஓர் அன்பரிருந்தார். அவர் அதற்குமுன் 10 ஆண்டுகளாக அன்னையை அறிந்தவர், நம்பிக்கையில்லை. அன்னை கணவருக்கு, எனக்கில்லை என்ற கொள்கையுடையவர். மற்றவர்கள் பேசும்பொழுது தன் குடும்பத்தை நினைத்துப் பார்த்தார். சண்டை என்பது எப்பொழுது வந்தது என நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும் எனத் தோன்றியது. சந்தோஷமிருக்கிறதா என்பது தெரியவில்லை. சண்டை, சச்சரவுக்கு வேலையில்லை என மனம் கூறிற்று. ஆனால் ஏற்க மறுத்தது. டாக்டர் விஷயமும், படிப்பும் தெளிவாக மனதில் தென்பட்டன. டாக்டரிடம் போகும் வழக்கமிருந்தாலும் எப்பொழுது கடைசியாகப் போனோம் என நினைக்கவேண்டியிருந்தது. பிள்ளைகள் படிப்பு விஷயத்தில் தனக்கோ, கணவருக்கோ பிரச்சினையிருந்ததாக நினைவில்லை.

இருக்கவில்லை என மனம் கூறியதை அவரும் ஏற்றுக்கொண்டார். இவை அன்னையை வணங்குவதால் என அவருக்குப் புலப்படவில்லை, அவர் வணங்கவில்லையே.

> "எனக்கு டாக்டர் செலவில்லை, படிப்பு விஷயத்தில் ஆண்டவன் எனக்குப் பாரம் தரவில்லை,"

என்றார். அன்னையை ஒருவர் வீட்டில் வணங்கினால், பிறர் கண்டுகொள்வதில்லை. அப்படிப்பட்ட வீடுகளில் அன்னையைப் பற்றிப் பேச்சு எழாது. ஒருவர் அன்னையை வணங்குவதை மற்றவர் கருதமாட்டார்கள்.

❈ அன்னையை முதலில் அறிந்த சிறு குடும்பம். பாசத்தால் இணைக்கப்பட்டது. அனைவரும் ஒருவரை அறியாமல் அடுத்தவர் எதுவும் செய்யமாட்டார்கள். எந்தச் செய்தியும் உடனே அனைவருக்கும் வரும். அந்த வீட்டிற்கு அன்னை வந்தார். அவர் வந்த கடந்த 12 ஆண்டுகளாக அன்னையைப் பற்றிப் பேசுவதைத் தவிர, வீட்டில் வேறு பேச்சில்லை. கல்லூரிக்குப் போவதுமுதல் கடைக்குப் போவதுவரை எல்லாச் செயல்களையும் அன்னை மூலமாகக் காணும் கண்ணோட்டம் எழுந்தது. பெரிய வசதியில்லை, சிரமமில்லை. எப்படி அன்னை அனைவர் உள்ளங்களையும் ஆக்ரமித்தார் எனத் தெரியவில்லை. கோயில், குளம் போவது நின்றது. பண்டிகை கொண்டாடுவதில்லை. தரிசனம் பண்டிகையாயிற்று. சந்தோஷம் உள்ளிருந்து ஊற்றாகப் பொங்கி எழுகிறது. "என்ன இப்படிப் பூரிக்கின்றீர்கள்? என்ன விசேஷம்" எனக் கேட்கிறார்கள்.

- **பெண்கள் தியானத்திலிருந்து வந்து கல்லூரிக்குப் போனால்** beauty parlour**க்குப் போய் வருவதாகக் கூறுகிறார்கள்.**
- **ஒரு சிரமம் வந்தால், ஏற்கனவே அது மனம் சங்கடப்படும் நேரம். இப்பொழுது அது சமர்ப்பணத்திற்கான நேரம். அந்தச் சமர்ப்பணம் பலித்த வகை அடுத்த 10 நாளைக்குரிய** topic**.**



- **"நான் வீட்டைவிட்டுப் போவதில்லை. போகும் வயதோ, வசதியோ இல்லை. எனக்கு எங்கே தரிசனம்" என்று சோர்ந்தவர்** T.V.**யைப் போட்டால் அன்னை தரிசனம் தருகிறார்.**
- **முகம் தெரியாத புரோக்கரிடம் கொடுத்த பெருந்தொகை தகராறில்லாமல் வருவது அன்னையின் அளப்பரிய சக்தி.**
- **"நானும் என் மனைவியும் சமாதானமாக வாழமுடியும் என்ற நினைவை நான் ஆரம்பத்திலேயே இழந்தேன். அதுவும் முடியும் என அன்னை நிரூபித்தபின் எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது" என்பது ஓர் அனுபவம்.**
- **ஏன் ஆசிரமம் போகவேண்டும்? கேட்டவுடன் கிடைக்கும் பொழுது எங்கேதான் போகவேண்டும் என்பது ஒரு கிராமவாசியின் கணக்கு.**
- **2 வயதுக் குழந்தை தானே தியானத்திலிருப்பது கேள்விப்படாதது. அதுவும் அன்னை வாழ்விலுண்டு.**
- **அன்னையை அறிவது அதிர்ஷ்டம்,**
  **வழிபடுவது யோகம்.**

✯ ✯ ✯

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு புது விஷயத்தை - நமக்கு ஏற்கனவே தெரிந்ததைக் கொண்டு - புரிந்து கொள்வதை அறிவு என்கிறோம். புது விஷயத்தை அதன் கோணத்தில் புரிந்து கொள்வது சிந்தனையாகும்.

*உள்ளதை உள்ளபடி அறிவது சிந்தனை.*

## அன்பர் கடிதம்

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் பாதத்தில் சமர்பிக்கின்றேன்.

நான் CRPF-இல் Hyderabadஇல் LDCஆக பணிபுரிகிறேன். என் குழந்தைக்கு 6 வயது. அவனுக்கு Hyderabad climate condition ஒத்துவராமல் அடிக்கடி நோயினால் (ஜுரம், சளி, இருமல், weezing) அவதியுற்றான். எனவே அவனைச் சென்னைக்கு என் பெற்றோர்களிடத்தில் அனுப்பிவைத்தேன். அங்குக் கடவுளின் கிருபையால் பரிபூரணச் சுகத்துடன் இருக்கிறான். எனக்கோ குழந்தையைச் சென்னையில் விட்டுவிட்டு Hyderabadஇல் இருக்க மனம் இல்லாததால் சென்னைக்கு transfer கேட்டு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் ஆசியோடு apply செய்தேன். But அதை எனக்கு return செய்துவிட்டார்கள், due to some administrative reasons. So again I have applied for personal interview of IGP. Again எனக்கு அதையும் தர மறுத்துவிட்டார்கள். இதன்பிறகு நான் மிகவும் மனம் உடைந்து நம்பிக்கையில்லாமல் அழுதுகொண்டிருந்தேன். "அன்னையே உன்னிடம் நான் கேட்டு உன் பாதத்தில் வைத்து சமர்ப்பித்த என் விண்ணப்பம் இப்படி எல்லா வழிகளிலும் return செய்துவிட்டார்களே என்று வருத்தப்பட்டேன். எனக்கு வழி என்ன அன்னையே" என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன்.

திடீரென்று என் மனதில் IGP officeக்கு நாம் directஆகச் சென்று ஏன் அந்த concerned officerஐப் பார்க்கக்கூடாது என்று தோன்றியது. அதன்படியே அன்னை ஸ்ரீ அரவிந்தரை மனதில் நிறுத்தி ஒரு சனிக்கிழமையன்று உயர் அதிகாரியை சந்தித்து என் பிரச்சினைகள் அனைத்தையும் கூறினேன். அவரும் உன்னை நான் IGPஐப் பார்ப்பதற்கு permission வாங்கித் தருகிறேன் என்றார். பின்பு அதேபோல் IGPயிடம் அழைத்துச் சென்றார். ஆனால் IGPயோ



என் கஷ்டங்களைக் கேட்காமல் அவர் தன்னிஷ்டம்போல் பேசி என்னைத் திட்டி ''உனக்கு குழந்தை வேண்டுமா? வேலை வேண்டுமா? Transfer தரமுடியாது" என்று மறுத்து எழுதிவிட்டார். அதைக் கேட்டு இன்னும் மனம் வருந்தி மிகவும் கஷ்டப்பட்டேன். கிடைக்காது என்று நம்பிக்கை இழந்தேன்.

பிறகு நான் சந்தித்த அதே உயர் அதிகாரியை again சென்று பார்த்தேன். "ஐயா, என்ன செய்வது? IGP இப்படிச் சொல்லிவிட்டாரே? நீங்கள் மனது வைத்தால் நடக்கும், உங்களைத் தெய்வம்போல் நம்பியுள்ளேன்" என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் தினமும் அன்னை ஸ்ரீ அரவிந்தரை மனதில் நிறுத்தி பிரார்த்தனை செய்துகொண்டிருந்தேன். சில நாட்களுக்குப்பிறகு எனக்குச் சென்னை மாற்றல் one yearக்கு order வந்தது. என்ன ஆச்சரியப்பட்டேன் தெரியுமா? கிடைக்காது என்ற transferஐ அன்னை எவ்வளவு சுலபமாக அந்த உயர் அதிகாரியின் மனதில் புகுந்து செய்துவிட்டார். இது எவ்வளவு பெரிய விஷயம் அல்லவா?

* * *

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நாலு பேர் முன்னிலையில் தன் தகுதியைக் காப்பாற்றவும், தன் உள்ளுணர்ச்சிகளைப் புண்படாமலும் காக்க முனைவதைப்போல் மனிதன் விஷயத்தை அறிவால் புரிந்து கொள்ள முனைவதில்லை.

*தகுதியைக் காக்கும் மனிதன் அதுபோல் அறிவை நாடுவதில்லை.*

## There is no division between the Mother and the Supreme.

**சத்புருஷன் என்பது சத்பிரம்மம் என்றும், சத்புருஷனெனவும் இரு நிலைகளில் உள்ளது. இதுவே சிருஷ்டியின் முதல் நிலை.**
**சத்திலிருந்து 1) பிரபஞ்சம் 2) காலம் 3) சத்தியம் 4) ஜீவியம் எழுகின்றன.**

**சத் மூன்றாகப் பிரிகிறது. அவை, ஆத்மா, புருஷா, ஈஸ்வரா. காலமும், இடமும் பிரபஞ்சத்தைத் தாங்குகின்றன.**

**சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமாகும்பொழுது இடையே ஆத்மா உற்பத்தியாகிறது.**

**சத், ஜீவியம், ஆனந்தமாகவும் மாறுகிறது.**

**இவ்வைந்து மாறுதல்களும் சிருஷ்டியின் ஐந்து அம்சங்கள்.**

**இம்மாறுதல்கள் ஏற்படுமுன் உள்ள சத் என்பதை காலத்தைக் கடந்தது, பிரபஞ்சத்தைக் கடந்தது, சிருஷ்டியைக் கடந்தது, எந்த மாறுதல்களையும் கடந்தது என்கிறோம். ஆங்கிலத்தில் அந்நிலையை Transcendent, Supra Cosmic, Supreme என்கிறோம்.**

**ரிஷிகள் முடிவாக எய்திய நிலை அக்ஷரப் பிரம்மம்.**

**கீதை கூறிய புருஷோத்தமன், புருஷன் காலத்தைக் கடந்த நிலை.**

**புருஷன், சத் மூன்றாகப் பிரிவதில் - ஆத்மா, புருஷா, ஈஸ்வரா - நடுவில் உள்ள நிலை.**



**புருஷன் சிருஷ்டியில், பிரபஞ்சத்தில், காலத்தைக் கடந்தவன்.**

**புருஷன் சிருஷ்டியையும், பிரபஞ்சத்தையும் கடந்த நிலையில் புருஷோத்தமனாகும்.**

**அக்ஷரப் பிரம்மம் புருஷோத்தமனுக்குட்பட்டது.**

**புருஷோத்தமன் ஈஸ்வரனின் கடந்த நிலைக்குட்பட்டது.**

***ஈஸ்வரனின் கடந்த நிலையை Supreme என்கிறார் பகவான்.***
**அன்னைக்கும், Supreme, ஈஸ்வரனின் கடந்த நிலைக்கும் வித்தியாசமில்லை என்பது ஆரம்பத்தில் எழுதப்பட்ட வாக்கியம்.**

நாம் அன்னையை வணங்குவதால் அன்னையின் ஆன்மீக உயர்வை ஏற்கிறோம். இதற்கு வேறு விளக்கம் உண்டா?

- ❄ **Supreme காலத்தைக் கடந்த ஈஸ்வரன் கர்மத்திற்குக் கட்டுப்பட்டவனில்லை என்பதால், கர்மத்தைக் கரைக்கும் திறனுடையவன்.**
- ❄ **ஆயுள் காலத்திற்குக் கட்டுப்பட்டது. ஆயுளை வளர்க்கும் சக்தி காலத்தைக் கடந்த ஈஸ்வரனுக்குண்டு. ஜாதகப்படி நிர்ணயிக்கப்பட்ட ஆயுள் அன்பருக்கு நீடிக்கிறது என்றால், அதை நீடிக்க வைக்கும் திறன் தெய்வீகமனக் கடவுள்களான சிவன், விஷ்ணு, போன்றவர்கட்கு இயல்பாக இல்லை. அன்னைக்கு இயல்பாக உண்டு.**

இக்கருத்தை வேறுவகையாகவும் கூறலாம்.

எதிரி எல்லையைக் கடந்துவந்தால், இராணுவம் எதிரியை விரட்டும். எல்லையில் உள்ள மக்களால் எதிரியின் இராணுவத்தை முறியடிக்க முடியாது. அப்படிச் செய்தால் அந்நாட்டு மக்களுக்கு

இராணுவத் தகுதியுண்டு. அதுபோன்ற ஒரு நாடில்லை. 500 மைலுக்கப்பாலுள்ள எல்லை தாக்கப்பட்டால், இங்கு 5000 பேர் கூடிப் பிரார்த்தனை செய்தால், அப்பிரார்த்தனை அந்நாட்டு இராணுவம் வெற்றி பெறுவதன்மூலம் பலிக்கும். அப்பிரார்த்தனை இராணுவமின்றி பலித்ததாக வரலாறில்லை. ஒருவர் ஆன்மீக சக்தி இராணுவத்தை விரட்டமுடியாது. அந்த சக்தி நாம் வணங்கும் கடவுள்கட்கு இல்லை.

**சைனா இராணுவத்தை அன்னையின் சக்தி திரும்ப அனுப்பிற்று.**

ஏனெனில் அன்னைக்கும் காலத்தைக் கடந்த ஈஸ்வரனுக்கும் வித்தியாசமில்லை. இதுபோன்ற நிகழ்ச்சிகள் மனித அனுபவத்திலில்லை. பெரிய நிகழ்ச்சிகளில் அன்னையின் ஆன்மீக சக்தி தெளிவாக வெளிப்படுவதுபோல் சிறிய நிகழ்ச்சிகளிலும் வெளிப்பட்டாலும், நாம் சிறிய நிகழ்ச்சிகளில் அதைக் கண்டாலும், விஷயம் சிறியதாக இருப்பதால், சக்தி மனத்தைத் தொடுவதில்லை.

காணாமற் போன பொருள் கிடைப்பது உலகம் அறிந்த ஆன்மீகப் பலன். தொலைந்த பொருளைத் தேடினால் பிரார்த்தனை பலித்து அது கிடைக்கிறது. அன்னையிடமும் அதைக் காணலாம். காணாமற்போன பொருளைத் தொலைத்தவர், தொலைத்தது உண்மை, ஒரு குறையிருந்ததால் அது தொலைந்தது. அவர் தம் குறையை உணர்ந்து குறையை நிறைவாக்கியபின் நான் தேடமாட்டேன், பிரார்த்திக்க மாட்டேன் என்றால் அப்பொருளைக் கிடைக்கச் செய்யும் சக்தி உலகில் இல்லை.

அந்த சக்தி Supremeஉடன் கலந்துள்ள அன்னைக்குண்டு. அதுபோன்ற பெரிய சக்தி சிறியதாகத் தோன்றும் நிகழ்ச்சிகளில் வெளிப்பட்டவை ஏராளம். அவை எளிய மனிதன் மனத்தைத் தொடா. அது ஒருவர் மனத்தைத் தொட்டு அன்னையின் Supreme கடந்த



நிலையை உணர்த்துவது அவருடைய பக்தி அன்னையை அறியவேண்டியபடி அறிந்துள்ளது எனப் பொருள்.

- **காணாத பொருள் தொலைத்தவரைத் தேடி வந்துள்ளது.**
- **துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்ட கப்பல் திரும்ப அன்பர் அழைப்புக்கு இணங்க வந்தது. விமானமும் அப்படியே வந்துள்ளது.**
- **கெடு முடிந்தபின் கடன் கொடுத்த பேங்க்கை 30 நாள் தவணை கேட்கப் போனவருக்கு பேங்க் கடனைக் கேட்காமல், மேலும் கடனளிக்க முன்வந்தது பாக்கி திருவுருமாறியதாகும்.**
- **நாமறிந்த தெய்வங்கள் சிருஷ்டியிலுள்ளவை.**
- **அன்னை பரிணாமத்திற்குரிய தெய்வம், அதனால் திருவுருமாறுகிறது.**
- **நாம் திருவுருமாற்றத்தைக் காணும்தோறும் அன்னையைக் காணலாம். அன்னை காலத்தைக் கடந்த Supreme எனக் காணலாம்.**

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சேவை என்பது இல்லாமலில்லை. அடுத்தவர் பயனடைவதற்கான செயல் நம் கொள்கைப்படிச் சேவையாகிறது. தன்னையோ, பிறரையோ கருதாமல் இலட்சியமாகச் செயல் அமைந்தால் அது சேவையாகும். அடுத்தவரிடமுள்ள ஆன்மா அதை ஏற்றுக்கொள்ளும். அடுத்தவருடைய அகந்தைக்கு அது பயன்படாது.

*சேவை ஆன்மாவுக்கு, அகந்தைக்கில்லை.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - என்னுடைய நாளை (24 மணி) எப்படி அமைத்துக்கொண்டால் நல்லது எனக் கூறவேண்டும்.

அண்ணன் - எப்படிப் பார்த்தாலும் நாள் முழுவதும் அன்னையுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புள்ளபடி அமைக்கவேண்டும் என்பது சட்டம்.

தம்பி - நடக்காதன எல்லாம் பேசினால், அது பேச்சோடு போய்விடும். என்னால் முடியக்கூடியதாகச் சொன்னால் நல்லது.

அண்ணன் - இது முடியும். அவசியம். இதற்குக் கீழே போனால் அன்னை தரிசனச் சமயங்களில்தான் நினைவு வரும். சாதாரண மனிதன் கோயிலுக்குப் போவதுபோல் முடியும். அன்னையைச் சற்று நேரம் தீவிரமாகவும், முக்கிய விஷயங்களில் முக்கியமாகவும், பொதுவான விஷயத்தில் பின்னணியாகவும், எதுவும் முடியாத நேரத்தில், "இங்கு எனக்கு அன்னை மறந்துவிட்டது" எனவும் கொள்ளமுடியும்.

தம்பி - Negative memory மறந்துவிட்டோம் என அறிவதும் அன்னையை நினைவு கூர்வதாகும். சரி சொல்லுங்கள்.

அண்ணன் - 1) First waking thought, விழித்தவுடன் வரும் நினைவு, before sleeping நாள் முடிவில் அன்னையை நினைத்துத் தூங்கப் போவது.

இப்படிச் செய்வதால் இரவு முழுவதும் ஏதோ ஓரளவில் நம்முடன் அன்னை நினைவு இருக்கும்.



2) காலையில் வேலைக்குப் போகுமுன் - அரை மணி நேரம் அல்லது 10 நிமிஷம் - அன்றைய எல்லா வேலைகளையும் அன்னையிடம் உணர்வுபூர்வமாகச் சொல்லுதல்.

3) எல்லோருக்கும் மிக முக்கியமான வேலை என இருக்கும். மாணவனுக்குப் பரீட்சை, பெண்ணுக்குத் திருமணம், வியாபாரிக்கு ஆர்டர் என எவருக்கும் மனதில் நிரந்தரமான விஷயம் என்றிருக்கும். அதை 2 அல்லது 3 முறை மனதில் ½ நிமிஷம் கொண்டுவந்து சமர்ப்பணம் செய்வது.

❈ இதன் பெரும் பலன் வேண்டுமானால் நேரம் குறிக்கப்பட்டு நிமிஷம் தவறாமல் உதாரணமாக காலை 7½ மணி, இரவு 8.15, மத்தியானம் 1.15 எனக் குறிப்பிட்டு அந்த நிமிஷத்தில் செய்வது அவசியம்.

❈ அது முடியாதவர் 2 அல்லது 3 முறை 1 நாளில் சமர்ப்பணம் செய்யவேண்டும்.

4) அவசரமான வேலை, அவசியமான வேலை, கழுத்துக்குக் கத்தி எனச் சில சமயங்களில் ஒரு வேலை இருப்பதுண்டு. எலக்ஷன், தொலைந்துபோன குழந்தை, கோர்ட் கேஸ், வந்த நல்ல வரன் நல்ல முடிவு சொல்வது என விஷயமிருப்பதுண்டு. அதை hourly consecration மணிக்கொருமுறை சமர்ப்பணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். இதையும் மேற்சொன்னதுபோல் குறிப்பிட்ட நிமிஷத்திலாவது, அல்லது மணிக்கு ஒரு முறையாவது செய்ய வேண்டும்.

5) எந்த வேலை செய்தாலும் சமர்ப்பணம் செய்து ஆரம்பிக்கவேண்டும். இல்லையெனில் சமர்ப்பணம் தவறிவிட்டது என்றாவது கவனிக்கவேண்டும்.

6) சாவித்திரி தினமும் ½ பக்கம் முதல் 5 பக்கம் வரை ஏதாவது ஒரு நேரம் படிக்கவேண்டும். முடியாவிட்டால் வாரத்தில் 1 நாளாவது மேற்கொள்ளவேண்டும்.

7) அரை நிமிஷம் தாமதிக்காமல் நடந்தால் நல்லது என சில சமயங்களில் பிரச்சினைகளிருக்கும். கேட்ட பெரிய கடன் வருவது, வடக்கே போன மகன் இந்த வாரம் வருவான் என்பது படபடப்பாகிவிட்டது, வேண்டாத விருந்தாளி வந்து 52 நாள் ஆகியும் போகவில்லை (உ.ம். மாமியார், நாத்தனார், தூரத்து உறவினர்), போன் கனெக்ஷன் வரும் என எதிர்பார்ப்பது போன்றவை 'எப்பொழுது முடியும்' என முள் மேல் நிற்பது போலிருக்கும். அதுபோன்ற பிரச்சினை இருந்தால் அதைக் கீழ்க்கண்டவாறு செய்யலாம். அரை நிமிஷத்தில் மிகத் திருப்தியாக முடியக்கூடிய முறையை a) எனவும் மற்றவற்றை பிறகும் எழுதியுள்ளேன்.

   a) பெரு முயற்சி செய்து அப்பிரச்சினை முழுவதையும் மறப்பதே அம்முறை. அது பலித்தால் அடிக்கடி தவறும். தவறும்பொழுது ஒரு க்ஷணம் நிதானித்து மனத்துள் நுழைந்த எண்ணத்தை அப்புறப்படுத்தவேண்டும்.

   b) மணிக்கொரு முறை சமர்ப்பணம் செய்தல்.

   c) தியானம் ஆரம்பிக்கும்முன் அப்பிரார்த்தனையை மேற்கொள்வது.



   d) அப்பிரச்சினையைப் பற்றிப் பேசக்கூடாது என்ற முடிவு.

   e) அது விஷயமாக மனதில் குறை எழக்கூடாது என்ற தீர்மானம்.

   f) நடக்கிறபொழுது நடக்கட்டும் என தீர்மானமாக விட்டுவிடுதல்.

   g) முடிந்ததை முடிந்தபொழுது செய்வது.

   h) அந்நினைவு வந்தால் அன்னையை நினைக்க முயல்வது. முடியாவிட்டால் மனத்துள் ஓர் புன்னகையை வரவழைப்பது.

   i) யாராவது அதை எழுப்பினால் react செய்யாமலிருப்பது.

   j) ஏதோ நல்ல காரணத்திற்காக தாமதம் ஆவதாகப் புரிந்துகொள்வது.

8) வாழ்க்கைக்கு முக்கியமான நெடுநாளையத் திட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து வேறு வேலையில்லாத பொழுது அதைப் பற்றிய விவரங்களைச் சேகரம் செய்வது, சிந்தனை செய்வது, அன்னை வழியில் அதற்கு முக்கியமானது என்ன என்று தேடுவது.

9) வேலையில்லாத நேரத்தில் கடந்த காலக் குறைகளுக்காக வருத்தப்படாமலிருப்பது.

10) முடிந்தால் அவற்றை past consecration கடந்த காலச் சமர்ப்பணத்திற்கு உட்படுத்துவது.

இந்த 10 தலைப்புகளில் ஒருவர் தம்மை உட்படுத்திக்கொண்டால், அவர் எந்த நிலையிலுள்ள

அன்பரானாலும், அவருக்கு downfall அதற்குக் கீழே போகவேண்டிய அவசியமிருக்காது. வாழ்க்கை ஒழுங்காக, நிதானமாக, ஏதோ ஓரளவில் குறையின்றி ஓடிக்கொண்டிருக்கும்.

தம்பி – இப்படியெல்லாமிருந்தால், புதுப் பிரச்சினைகள் எழுவதைத் தடை செய்யுமா?

அண்ணன் – விதிவிலக்கான விஷயங்கள் தவிர, புதுப் பிரச்சினைகள் எழா.

தம்பி – ஏதோ சுலபமாகச் சொல்வீர்கள் என நினைத்தேன்.

அண்ணன் – இதைவிடச் சுலபமாக வேண்டுமானால், அம்முறை கஷ்டம் வருவதை விலக்காது.

தம்பி – அது முக்கியம்.

அண்ணன் – பொதுவாகப் பரபர என இருப்பவர்கள் லாட்டரி எதிர்பார்ப்பார்கள். பெருமுயற்சியை மேற்கொண்டு திணறுவார்கள். நாளுக்கு நாள் ஒரு சொத்து விற்றுக் குடும்பம் நடக்கும். நான் அன்பர்களைப் பற்றிச் சொல்லவில்லை. வாழ்வு இதுபோல் பலவிதத்தின. அவர்களில் ஒரு விதத்தினர், இருப்பதைக் காப்பாற்றினால் போதும் என்பவர்கள். அவர்கள் வாழ்வில் செய்வதை நான் அன்பர்கட்கு – அவர்களுடைய உயர்ந்த நிலைக்குப் பொருந்துமாறு – சொல்லிய விதம் இது.

தம்பி – கைக்கு மெய்யாக இருப்பதைப் பார் என்பது பரவலான எண்ணம்.

அண்ணன் – இருப்பதைவிட்டு, பறப்பதை நாடுவதுபோல் என்பது ‘விவேகம்’.



தம்பி – அன்னை நேர் எதிராக அல்லவோ கூறுகிறார்கள்?

‘கைக்கு மெய்யாக இருப்பதே உண்மை’.

ஆனால் இன்று வரும் ‘பலாக்காயைவிட நாளைவரும் களாக்காய் மேல்’ என்பதே அன்னையின் சட்டம்.

அண்ணன் – நாளைய பலாக்காய் கூடாது, இன்றைய களாக்காய் வேண்டும் என்பது நம் நடைமுறை.

தம்பி – அன்னை முறையை விளக்க, உதாரணத்துடன் சொல்லுங்கள்.

அண்ணன் – பாக்டரியின் மேனேஜராக வருபவனுக்குக் கால் பங்கு இலாபம் தர வந்த முதலாளியிடம் ‘‘கால் பங்கு வேண்டாம். 4, 5 வருஷம் சம்பளம் கொடுங்கள். பிறகு பாக்டரியே எனக்கு வேண்டும்’’ என்றவன் இந்த பாக்டரியுமில்லாமல், எந்த வேலையுமில்லாமல், 7 வருஷம் அலைக்கழிந்து முடிவில் சொந்தத் தொழிலில் டைரக்டரானபொழுது அவன் மேனேஜிங் டைரக்டர், ‘‘இந்த பேப்பரில் கையெழுத்து போடு. எல்லாப் பணத்தையும் நான் எடுத்துக்கொள்கிறேன். நீயே பாங்க்கிற்குக் கட்டு’’ என்பதைக் கேட்டு தரையில் புரண்டு அழுததை நான் 100 முறை கூறியிருக்கிறேன்.

தம்பி – அதேபோல் மானேஜராக ரூ.450 சம்பளத்தில் 30 வருஷத்திற்கு முன் போனவர் முதலாளிக்கு நிறைய சம்பாதித்துக் கொடுத்தபொழுது 5% இலாபப் பங்கு தருவதாகச் சொன்ன முதலாளி 10% தந்தார். அது அன்று ரூ.40,000. மானேஜர் 5% போதும் என்றார். 2½ வருஷத்தில் மானேஜர், மானேஜிங் டைரக்டரானார் என்றும் சொல்லியிருக்கிறீர்கள்.

அண்ணன் - இதைவிடப் பெரிய 'பலாக்காய்' வேண்டுமா?

தம்பி - மேலும் உதாரணம் வேண்டும். விளக்கமில்லையா?

அண்ணன் - வேலையில்லாதவனுக்கு அமெரிக்காவில் வேலை வந்தது. அதனால் வீட்டிற்கு மரியாதை வந்தது. வீடு எதைப் பாராட்டுகிறது? அமெரிக்கா வேலையைப் பாராட்டி அமைதியாக இருக்கலாம். இன்றைய 'மரியாதை'யைப் பாராட்டி டமாரம் அடித்தது.

தம்பி - இங்கே பேசாமலிருக்கப் பொதுவாக முடியாது. டமாரம் அமெரிக்க வேலையை இல்லை என்றாக்கியது தெரியுமே.

அண்ணன் - நாளைய பெரிய நல்ல பலனை எதிர்பார்ப்பது பரந்த மனம். கைக்கு மெய்யாய் ஆர்ப்பாட்டம் செய்வது சின்ன புத்தி. பெரிய மனசுக்குப் பெரியது வருகிறது. சுலபமான விளக்கமாயிற்றே.

தம்பி - பெரிய மனசு வேண்டும் என்பதுதான் விளக்கமா?

அண்ணன் - அடக்கமான மருமகள், பெரிய இடத்து நட்பு, பல்கலைக்கழக பேராசிரியருடைய அடக்கம் எளிமையானவரிடமிருந்தும் அவர் கற்றுக்கொள்ளும் பாங்கு அரிது. அன்பர்கட்கு அது கிடைத்தால் மாமியார் உடனே கொட்டமடிக்கிறார். பெரிய இடத்து நட்பை பெருமையாகப் பேசுவது, அடக்கமானவரை மட்டம் தட்டுவது போன்றவற்றைச் செய்யாத அன்பருக்குப் பெரிய இடமே வந்துவிடும். எளிமையானவருக்குப் பேராசிரியர் பதவியே வரும்.

தம்பி - அந்தப் பொறுமை எப்படி வரும்?



அண்ணன் - அதிர்ஷ்டம் பெற அப்பொறுமை வேண்டும். அவசியம் வேண்டும். எலக்ஷனில் அடக்கமானவன் ஜெயிப்பதைக் காண்கிறோம் அல்லவா?

தம்பி - எலக்ஷன் நமக்கு அடக்கத்தை உணர்த்தவே வந்தது போலிருக்கிறது. இன்றைய மாமியார் அன்றைய மருமகள்போல் நடத்தப்படுகிறார். தானே மாமியாருக்கு அந்த அடக்கம் வந்தால் மருமகள் அன்றைய மருமகளாகி விடுவாள்.

அண்ணன் - அடக்கம் உண்மையாக வந்தால் அதற்கு அதிர்ஷ்டம் எனப் பெயர். அடக்கம் வந்து, அது உண்மையாக இருந்து, அதிர்ஷ்டம் வாராதவர் ஒருவரைச் சொல்ல முடியுமா?

தம்பி - அது சரி. அதிர்ஷ்டம் நிச்சயம் வருகிறது. உண்மையான அடக்கம் சின்ன மனிதனுக்கு வரும்பொழுது அவனுக்கு அழகாக நடக்கத் தெரியவில்லை. தன்னையே அசிங்கம் செய்துகொள்கிறான். கை கூப்பி வணக்கம் சொல்லவேண்டிய இடத்தில் காலில் விழுந்து நமஸ்காரம் செய்துவிடுகிறான்.

அண்ணன் - அடக்கம் வந்தது உண்மையானால், அது அழகான உருவம் பெறவே ஒரு தலைமுறையாகும். அடக்கத்துடன் அமைதி வர நாளாகும்.

தம்பி - அன்னை அமைதியை அனைவருக்கும் தருகிறார். நாமே அடக்கத்தைப் பெற்றால், அமைதி அதை அழகான பக்குவமாக்குகிறது. நம்மவர் பயந்துதான் அடங்குவார்கள்.

அண்ணன் - பயந்து அடங்கினாலும், அடக்கத்திற்குப் பலனுண்டு. பயந்த மாமியார். ஆர்ப்பாட்டமான மருமகள் வந்தாள். பையன் பெண்டாட்டிப் பேச்சைக் கேட்பவன். மாமியார் பயந்தவர், அன்பர். மருமகள் திட்டுவாள், அதிகாரம் செய்தாள், மாமியாரைப் பட்டினிப் போட்டாள், பலர் எதிரே கேலி செய்தாள், கொடுமை செய்தாள். மாமியாருக்கு வசதி அதிகம். மகனுடைய வசதியே மாமியாருடையதுதான். ஒரு வார்த்தை அவள் பேசினால் மருமகள் கொட்டம் அடங்கிவிடும். மாமியாருக்கு மாதம் 70,000 வருமானம். மகனுக்கு ரூ.3200 சம்பளம். "நீ தனிக்குடித்தனம் போ'' என மாமியார் மகனிடம் சொன்னால் எரிவதை இழுத்ததைப் போலாகும். மாமியார் அதைச் செய்யாமல் கேலிக்கும், அதிகாரத்திற்கும் ஆளானார். மருமகள் எது செய்தாலும் "மதர், மதர்....." என்பாள்.

தம்பி - என்ன ஆயிற்று?

அண்ணன் - பெண்ணின் தகப்பனாருக்கு ''மரியாதை'' முக்கியமாயிற்று. பெண்ணைத் தனிக்குடித்தனம் வைக்கச் சொன்னார். பெண் அவரை மீறமுடியவில்லை. அவர் வசதியற்ற பெரிய குடும்பக்காரர் - பெரிய குடும்பம் என்றால் 11 பேருள்ள குடும்பம் - 6000 ரூபாயில் வாழ்பவர். அத்துடன் "மாமியாரிடம் ஒரு பைசா வாங்கக்கூடாது. உங்கள் வீட்டுப் பக்கம் மாமியார் காலடி எடுத்து வைக்கக்கூடாது'' என உத்தரவு போட்டுவிட்டார்.

தம்பி - ஆச்சரியமாக இருக்கிறதே. பெரிய விடுதலையாயிற்றே?

அண்ணன் - மாமியார் பக்தி பலித்தது. அவர் தம் பயத்தை தைரியமாக மாற்றியிருந்தால், பெண் தம்போல் அடக்கமாகியிருப்பாள்.



தம்பி - எப்படி மாற்றுவது?

அண்ணன் - மருமகள் ஆர்ப்பாட்டத்திற்குப் பயந்து அடங்குவதற்குப் பதிலாக உண்மையாகவே மனம் அடக்கத்தை மேற்கொண்டால் பயம் மாறி தைரியமாகும். அத்தோடு, பயம் தரித்திரம், தைரியம் அதிர்ஷ்டம். அப்படிச் செய்திருந்தால் வருமானம் பெருகும்.

தம்பி - என்ன இலட்ச ரூபாயாகியிருக்குமோ?

அண்ணன் - 70,000 ரூபாய் சம்பாதித்த பயந்தாங்கொள்ளி, அதுபோல் மாறியதால் 20 லட்சமானது உனக்குத் தெரியுமா?

தம்பி - பயத்திற்கும் பணத்திற்கும் என்ன சம்பந்தம்?

அண்ணன் - தைரியத்திற்குத் தைரியலக்ஷ்மி எனப் பேராயிற்றே.

தம்பி - ஆமாம். தைரியலக்ஷ்மியிருந்தால் மற்ற ஏழு லட்சுமியும் வரும் என்று ஒரு கதையுண்டு.

அண்ணன் - தைரியமாக இருக்க பொய் சொல்லக் கூடாது. உண்மை பேசத் தைரியம் வேண்டும்.

தம்பி - அதை யாரிடமும் சொல்ல முடியாது.

அண்ணன் - அந்தப் பரீட்சை பாஸாகாதவர்க்கு இரண்டாம் கட்டம் இல்லவேயில்லை.

தம்பி - மறைத்தால்தான் பிழைக்கலாம். எப்படி உள்ளதை வெளியில் சொல்வது?

அண்ணன் - மறைக்கக்கூடாததை, சொல்லவேண்டிய தைரியம் அவசியம். அது இல்லாதவனைப் பற்றிப் பேச்சில்லை.

*தொடரும்.....*

☆ ☆ ☆

# இலட்சியத் திருமணம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

பாட்டி தன் மகனுக்குக் கடிதம் எழுதி வரவழைத்திருந்தாள். உமாவின் திருமணத்திற்குப்பின் பிள்ளைகளைச் சமாளிக்க முடியாது. நல்லதோ கெட்டதோ பிள்ளை வந்து அவர்களை அழைத்துப் போகட்டுமென்று. அவன் வந்து இரண்டு மூன்று நாட்களாய் பிள்ளைகள் தன்னைவிட்டு விலகி உமாவை ஒட்டிக்கொள்வதால் ஒன்றும் புரியாமல் தவித்தான். கடைசி நேரத்தில் வற்புறுத்தி அழைத்துப்போகக் காத்திருந்தான்.

மாப்பிள்ளையின் பேச்சைக் கேட்டு குழந்தையின் தந்தை (பாட்டியின் பிள்ளை) முன்வந்தான். ''மாப்பிள்ளை! இந்தக் குழந்தைகளின் உரிமையாளன் நான்தான். என் அறிவீனத்தால் என் குழந்தைகளை நான் இழந்துவிட்டேன். உங்கள் நல்ல மனதிற்கு நீங்கள் நீடு வாழவேண்டும்'' என்று கூறி, குழந்தைகளைப் பிடித்திழுத்தான். அர்விந்த் கீழே விழுந்து அழுதான்.

மாப்பிள்ளை, உடனே குழந்தையை எடுத்து மடியில் இருத்திக்கொண்டு "உங்களுக்குத் தடையில்லையென்றால் இவர்கள் எங்களுடனேயே இருக்கட்டும். உலகில் எதுவும் அதிசயமில்லை. இறைவன் அருள் இருந்தால் எதுவும் நடக்கும். என் பெற்றோர் என்ன சொல்வாரோ என்றஞ்ச வேண்டாம். அவர்கள் மிகவும் நல்லவர்கள்'' என்று கூறிவிட்டான்.

பிரச்சனைக்குக் காரணமான குழந்தைகள் மகிழ்வுடன் அவர்களுடன் இருந்தனர். சம்பந்தி அம்மாவோ குழந்தைகளிடம் அன்பாக இருந்தாள்.

இவர்களுடன் உமா மாமியார் வீடு சென்றாள். குழந்தைகளுடன் குடும்பம் ஆரம்பமாயிற்று.



தன் மகனுக்குக் குழந்தைப்பேறு வேண்டும் என சம்பந்தியம்மாள் அவர்களின் தனிமையில் குறுக்கிடாமல் பிள்ளைகளைத் தன்னுடன் வெளியூரெல்லாம் அழைத்துச் சென்றாள்.

நாட்கள் மாதங்களாயின. உமா கருவுறவில்லை. மாமியார் உமாவிடம் லேடி டாக்டரிடம் போவோமா என்றாள் பரிவாக. "ஆகட்டும் அத்தை'' என்று உடன் புறப்பட்டாள். சோதித்த டாக்டர் பெண் ஆரோக்யமாயிருப்பதாயும், குழந்தை பெறும் வாய்ப்பு 100க்கு 100 உண்டு என்றார்.

பெண்ணிடம் குறையில்லை என்றால் பிள்ளையிடம் குறையா? ஐயோ! அவன் இதைத் தாங்குவானா? குழந்தைகள் என்றால் அவனுக்குப் பிடிக்குமே என்று தவித்தாள் மாமியார். எப்படியாவது தன் மகன் கவலை தெரியாமல் இந்தக் குழந்தைகளுடன் சந்தோஷமாய் இருப்பதைப் பார்த்துச் சமாதானம் ஆனாள்.

ஊரார் பேசாதிருப்பரா. குறை மகனிடம் என்றதும் சும்மாயிருக்கிறாள். மருமகளிடம் என்றால் சும்மாயிருப்பாளா? அதுதான் கல்யாணத்தின்போதே குழந்தைகளுடன் அழைத்துவந்தாள் என்றனர்.

உமா மனம் புண்பட்டாள். அன்று தன் கணவனிடம் தனிமையில் இதுபற்றிப் பேசினாள். ''ஊரார் உங்களிடம் குறையிருப்பதாகப் பேசும்போது என்னால் தாங்கமுடியவில்லை'' என்றாள்.

''ஊரார் எதைப் பேசவில்லை. அவர்களுக்கு எதையாவது பேசவேண்டும். எல்லாம் சில நாட்களே. இளையான் அடக்கம் அடக்கம் என்பார்கள். வலிமையுடையவன் பொறுப்பதுதான் உண்மையான பொறுமை. என் இலட்சியத்திற்குத் துணை வரும் நீ என்னைப் புரிந்துகொண்டால் போதும்'' என்றான் பரிவாக.

இவன் ஆண்மை பேராண்மையல்லவா என்று பெருமிதம் கொண்டாள் உமா. புதுயுகம் பூத்துவிட்டது.

*முற்றும்*

☆ ☆ ☆

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கியக் கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 50 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 18. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |
| 19. | அபரிமிதமான செல்வம் | ரூ. 50 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

---

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## லஞ்சம்

அலெக்ஸாண்டர் கவர்னராக இருந்தபொழுது அவரிடம் ஒருவர் தாம் ரிடையராகி 1½ வருஷமாகிறது, இன்னும் பென்ஷன் வரவில்லை எனக் கூறியபொழுது அலெக்ஸாண்டர் தமக்கு ஓய்வு பெற்ற பின் 3 ஆண்டாகியும் பென்ஷன் வரவில்லை என்றார். இதுபோன்ற நிலை லஞ்சம் வளரும் சூழல். பெரிய உத்தியோகத்திலிருந்தவர்களும் அனுபவமில்லாதவர்போல் நடப்பதுண்டு. தினமும் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும் வக்கீல் சாட்சியாகும் நேரம் வந்தால், ஒன்றுக்கு மற்றதாக உளறுவது வழக்கம். சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவர், "சுப்ரீம் கோர்ட்டில் உள்ள நீதிபதிகட்கு அறிவு அதிகம் என்ற அபிப்பிராயம் தவறு. சப்-ஜட்ஜாக வந்தபொழுது இருந்த புத்திசாலித்தனம் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்தால் வளருமா? அனுபவம் வளரும். அறிவு வளராது" என்றார்.

பெரிய பிரைவேட் கம்பனியில் பெரிய வேலை செய்தவருக்கு ஓய்வு பெற்றபின் பெருந்தொகை வரவேண்டும். உத்தியோகம் பெரியதானாலும், உலக விவகாரங்களில் அனுபவமில்லாதவர். இவ்விடங்களில் பெரிய பெருச்சாளிகள் உலவும். இவருக்கு உதவி செய்வதாகக் கூறி ரூ. 50,000/- ஒருவர் பெற்றுக் கொண்டார். இது லஞ்சம். இப்படிப்பட்டவர்க்குப் பணம் கொடுத்தால் திரும்பி வருமா? பென்ஷன் எப்படி வரும்? இந்நிகழ்ச்சியைக் கேட்டவர் அனைவரும் திடுக்கிட்டனர், நம்பவில்லை. பிரச்சினை அன்னையிடம் வந்தது. பிரார்த்தனை மனதில் எழுந்தது.

- லஞ்சமாகக் கொடுத்த பணம், யானை வாயில் போன கரும்பு போன்றது. எனினும் திரும்பி வந்தது.
- பென்ஷன் பணமும் பின்னால் உடனடியாக வந்து சேர்ந்தது.

★ ★ ★

## திட்டினால் தித்திக்கும்

American President என்ற சினிமாவில் பிரசிடெண்டுக்கு ஒரு பெண் மீது பிரியம் வருகிறது. அவள் ஒரு கமிட்டிக் கூட்டத்தில் பிரசிடெண்டைக் குறைவாகப் பேசுகிறாள். அறைக்குள் வந்த பிரசிடெண்ட் காதில் அது விழுகிறது. அச்சொற்கள் அவர் மனதில் பிரியத்தை ஏற்படுத்துகின்றன. மன்னிப்புக் கேட்கிறாள். மன்னிப்பு அவர் காதில் விழவில்லை. மயக்கம் அவர் மனத்தில் ஏற்படுகிறது. அவள் வீட்டிற்குப் போய் ரிச்சர்ட் என்பவருடன் போனில் பேசுகிறாள். ரிச்சர்ட் அவளுக்கு எரிச்சல் மூட்டுகிறான். "நான் யார் தெரியுமா? நான் அமெரிக்க பிரசிடெண்ட்" என்கிறான். "என்னுடன் பேசாதே. போனை வை" என அவள் சத்தம் போடுகிறாள். இரண்டு நிமிஷத்திற்குள் அமெரிக்காவின் பிரசிடெண்ட் அவளைப் போனில் கூப்பிடுகிறார். பெண் அது ரிச்சர்ட் என நினைத்துக் கொண்டு தாறுமாறாகப் பேசி போனை வைத்து விடுகிறாள். அவள் போனை வைக்கும் முன் பிரசிடெண்ட் தன் நம்பரைக் கொடுத்து தன்னிடம் பேசும்படிக் கேட்டுக் கொள்கிறார். அவளுக்கு அவருடன் பேசியபொழுது தான் ரிச்சர்ட் என தவறாக நினைத்துத் திட்டியது பிரசிடெண்ட் எனத் தெரிகிறது. அன்று மாலை dinnerக்கு அவர் அவளை அழைக்கிறார். நடந்ததை அவள் ஒரு வயதான பெண்மணியிடம் கூறி, "இன்று இரண்டு முறை பிரசிடெண்டைத் திட்டிவிட்டேன். அவரைப் பார்க்க பயமாக இருக்கிறது" என்கிறாள். பெண்கள் திட்டுவது ஆண்களுக்குத் தித்திக்கும். என்னை விளக்கம் கேட்காதே என்கிறாள் அப்பெண்.

- முரண்பாடு உடன்பாடு என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- எல்லா முரண்பாட்டின் பின்னால் உள்ளது உடன்பாடு.
- நம் மனம் தாழ்ந்திருப்பதால் நாம் தேடும் உடன்பாடு, முரண்பாடாக வருகிறது.
- சிருஷ்டியில் ஆணுக்குப் பெரிய முரண்பாடு பெண். அதனால் அவளே அவனுக்குப் பரிணாமத்தைப் பூர்த்தி செய்யும் பெரிய உடன்பாடாகும்.
- ஈஸ்வரன் சக்திக்குச் சரணடைந்து தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறான் என்பது விளக்கம்.
- மனம் தாழ்வாக இருப்பதால் பெரிய உடன்பாடு பெரிய முரண்பாடாக - திட்டுவதாக - அமைகிறது.
- மனம் உயர்வாக இருந்தால் திட்டுவதற்குப் பதிலாக ஜீவன் திருவுருமாறும்.

என்னை விளக்கம் கேட்காதே என்று படத்தில் அந்த வயதான பெண்மணி கூறியதற்கு ஸ்ரீ அரவிந்தம் அளிக்கும் ஆன்மீக விளக்கம் இது.

**அன்பு எழுந்தபின் திட்டினால் அன்பு பெருகும்.**
**அன்பில்லாமல் திட்டினால் திட்டு பெருகும்.**
**அடிக்கும் கணவனை அன்பால் நாடுவது இந்த சட்டப்படியேயாகும்.**
**அன்பு அடித்தால் அன்பு பெருகும்.**
**அன்பில்லாமல் அடித்தால் அடி பெருகும்.**
**திட்டும் பெண்ணும், அடிக்கும் ஆணும் உடன்பாட்டைத் தாழ்வாக நாடும் உருவங்கள்.**

★ ★ ★